# 4448 வியாதிகள் விளக்கம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 227

# 4448 - வியாதிகள்

## (ஒரு விளக்கம்)

*சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :*

**டாக்டர். ச. அரங்கராசன்,** B. I.M...

சித்தமருத்துவ அலுவலர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

2006 ] [ விலை : **ரூ. 50-00**

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : 4448 வியாதிகள் - ஒருவிளக்கம் |
| பதிப்பாசிரியர் | டாக்டர் ச. அரங்கராசன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 227 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : மூன்றாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2006 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 136 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ.5 0-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள பன்மொழிச் சுவடிகளில் 'சித்தவைத்தியச்' சுவடிகள் சிறப்பானவை.

பண்டைக் காலத்தில் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் பல சித்தர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். சித்தர்களில் சிலர் வகுத்த மருத்துவமுறை சித்தமருத்துவம் என்பதாகும். இத்தகைய சித்த மருத்துவ முறை தமிழில் மட்டுமே காணக்கிடைப்பதாலும், தமிழ்நாட்டிலேயே பயிலப்பட்டு வருவதாலும், சித்தமருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் என்றும் கூறுவர். இம்மருத்துவ முறையை அரிதின் முயன்று வகுத்தவர்களில் பதினெண்மர் சிறந்தவர்கள். அவர்களுள் தலையாயவர் அகத்தியர். அதனால் சித்தமருத்துவ முறையை அகத்தியர் வைத்திய முறை என்றும் கூறுவதுண்டு.

பத்தாம் திருமுறையாகிய 'திருமந்திரம்' இயற்றிய திருமூலர், தம் நூலில்,

"***உடம்பார் அழியில் உயிரார் அழிவர்,***
***திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்***"

என்று கூறுகிறார். உடம்பினை ஓம்புதல் மக்களுக்கு முதற்கடன் என்று கூறுகிறார்.

நம் நூலகத்தில் 162-d எண்ணுடைய தமிழ் அகத்தியச் சுவடி, மக்களை வாட்டும் 4448 நோய்கள் பற்றிக் கூறுவதாகும். இந்நூலில் 23 விருத்தப்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் காப்பியக் கூறுகளில் ஒன்றாகக் கருதப்படும் அவையடக்கம் இடம்பெற்றிருப்பது போற்றுதற்குரியது. இவ்வவையடக்கப் பாடலிலேயே இப்புவியில் மனிதர்களுக்கு ஏற்படும் 4448 நோய்கள் பற்றி உரைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர் ச. அரங்கராசன் இச்சுவடியை ஆய்ந்து நோய்ப்பிரிவுகள் பற்றியும், அவை பற்றிய பல மருத்துவர் கூறும் கருத்துக்களையும் மேற்கோள் காட்டிச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார். 1985-ல் முதற்பதிப்பு வெளியிடப்பட்டது. இந்நூல் தற்போது இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. இந்நூல் குறிப்பாகச் சித்தமருத்துவத் துறையினரும், பொதுவாக அனைத்து மக்களும் வாங்கிப் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது என நம்புகிறேன்.

இந்நூல் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் பொறுப்பு வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட கணினி பிரிவினருக்கும், நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*21-8-2006*

# முன்னுரை

4448 என்ற தொகையானது சித்த மருத்துவத்தில் நோய்களின் கூட்டமாகக் கூறப்படுகின்றது. அதைப்பற்றிய, விளக்கமான நூல்கள் தனியே ஏதும் இதுவரை வரவில்லை. இந்நிலையில் 4448 நோய்களைப்பற்றிய ஒருசுவடி, 162-B தஞ்சாவூர் சரசுவதி மகாலில் கிடைத்தது. இதனை அடிப்படையாகக்கொண்டு, ஒரு நூல் எழுதலாம் என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் இந்த நூல் யார் எழுதியது என்றும் எக்காலத்தில் எழுதப்பட்டது என்ற விவரங்கள் கிடைக்கவில்லை. கிடைத்த சுவடியும் எளிமையான தமிழில் எழுதப்பட்டது, அதனை சீர்திருத்தி, படித்து, படிஎடுத்து, புதுப்பிக்கும் நிலையில் இருந்துள்ளது. எளிய தமிழில் இருந்தாலும் , இதை புது முயற்சியாக எண்ணி முடிந்தவரை நூலாக்கம் செய்துள்ளேன். 4448 நோய்களின் பிரிவுகள் எல்லாம் விளக்கமாகக் கிடைக்கவில்லை. கிடைத்தவிவரங்களை எல்லாம் சேர்த்து ஓரளவு, தர முயற்சி செய்துள்ளேன். மேற்படி நோய்ப்பிரிவுகள், ஒவ்வொரு சித்தர் நூல்களிலும் வேறு வேறு முறைப்படி எண்ணிக்கைகள் காணப்பட்ட போதிலும், எல்லாவற்றையுமே, தொகுத்துத் தந்து உள்ளேன். பொருள் புரியாத நிலையில் உள்ள பாடங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்தில் ஏதேனும் வேறு சுவடிகள் கிடைத்தால் ஒப்பிட்டு செம்மை செய்து வெளியிட இயலும். கிடைத்த வரையில் கிடைத்த செய்திகளின் தொகுப்பு என இந்நூல் வெளிவர உள்ளது.

நோய்களில் கண்நோய், வாதநோய் தவிர ஏனைய எண்ணிக்கை பெரும்பாலும் ஒத்து வரவில்லை. நோய்களைப் பற்றிய சிலருடைய கருத்துக்களையும் செவ்வனே மேற்கோள் மூலம் காட்டி உள்ளேன். இந்நூலின்கண் காணப்படும் தொகை எண்ணிக்கைக்கும்,

சித்த மருத்துவ அகாரதி மற்றும் சித்தமருத்துவ நூல்களுக்கும் பெரிதும் வேறுபாடுகள் உள்ளன. ஆங்காங்கே சித்தர்களின் மேற்கோள்கள் காட்டப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் மொத்தம் 23 பாடல்களே உள்ளன. பெரும்பாலும் நோய் எண்கள் தரப்பட்டு உள்ளன. பாடல்கள் முழுவதும் முற்றுப்பெறவில்லை என்றே தோன்றுகின்றது. ஏனெனில் *4448* நோய்கள் கூட்டுத்தொகையில் இடம்பெறவில்லை. எனினும் இது ஒரு அரிய சுவடி என்பதில் ஐயமில்லை. இச்சுவடியின் மூலம், *4448* நோய்களைப் பற்றிய பெரியதொரு புத்தகம் எதிர்காலத்தில் வருவதற்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன.

இது போன்ற ஆராய்ச்சி நூல்கள் தோன்றுவதற்கு சரஸ்வதி மகால் போன்ற நூலகங்களும், சித்தமருத்துவ இயக்கமும், சித்தமருத்துவர்களும் முன்வர வேண்டும். அதுபோன்ற நூல்கள் வெளிவருவதற்கு, இந்நூல் ஒரு முதற்படியாக அமையவேண்டும். இயன்ற அளவு குறுகிய மூன்றுமாத அளவில் திரட்டி, ஒப்பிட்டுக்காட்டி உள்ளேன். குறைகள் இருப்பின், கூறினால் எதிர்காலத்தில் அவைகளைக் களைய வாய்ப்புகள் உண்டு.

இந்நூலைப் பதிப்பிக்க அனுமதியளித்த மாவட்ட- ஆட்சித்தலைவரும் இயக்குநருமான திரு. டி. ஆர். இராமசாமி, இ.ஆ.ப., அவர்களுக்கும், நிருவாக அதிகாரி (பொறுப்பு) திரு. அ. பஞ்சநாதன், எம்.ஏ., பி.லிப்.சி., அவர்களுக்கும், செம்மைப்படுத்தி பாங்குடன் அமைத்துத் தந்து உறுதுணையாக இருந்த நண்பர்களுக்கும் நூலக அச்சகத்தாருக்கும் ஏனையோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர். ச. அரங்கராசன்,**
**சித்தமருத்துவ அலுவலர்.**

தஞ்சாவூர்,
*20-12-85.*

# 4448 - வியாதிகள்

(ஒரு விளக்கம்)

## சரசுவதி மகால் வெளியிட்டுள்ள

## வைத்திய நூல்கள்

| | | |
|---|---|---|
| அகத்தியர் 110 | 2001 | 30-00 |
| அகத்தியர் 100 | 2005 | 40-00 |
| அகத்தியர் 2000 பாகங்கள் I & II | 2006 | 120-00 |
| அகத்தியர் 2000 மூன்றாம் பாகம் | 2002 | 150-00 |
| அனுபவ வைத்திய முறைகள் | 2005 | 30-00 |
| அகத்தியர் அட்டவணை வாகடம் | 1991 | 52-00 |
| ஆனந்த கந்தம் (ரசவாத நூல்) | 2005 | 120-00 |
| ஆயுர்வேத உபதேசங்கள் பாகம் I | 2005 | 40-00 |
| ஆயுர்வேத உபதேசங்கள் பாகம் II | 2005 | 30-00 |
| பிரம்மமுனி சூத்திரம் முதல் பாகம் | 2005 | 80-00 |
| போகர் நிகண்டு அட்டவணை | 2001 | 18-00 |
| போஜன குதூகலம் | 2005 | 90-00 |
| தன்வந்திரி ஏரண்டத்தைலம் | 1999 | 20-00 |
| கர்ப்பிணீ ரக்ஷை | 2004 | 12-00 |
| தன்வந்திரி வைத்தியம் பாகம் I | 2006 | 100-00 |
| தன்வந்திரி வைத்தியம் பாகம் II | 2006 | 80-00 |
| எண்ணெய் வாகடம் | 2005 | 50-00 |
| கர்ப்பிணி பாலரோக சிகிட்சை | 2006 | 120-00 |
| குன்மரோக சிகிட்சை | 2001 | 100-00 |
| ஜ்வரரோக சிகிட்சை | 1991 | 50-00 |
| கொங்கணர் சரக்கு வைப்பு | 2004 | 16-00 |
| மாடுகள், குதிரைகள், பறவைகள் வைத்தியம் | | 40-00 |
| மச்சமுனி நாயனார் 800 | 2005 | 60-00 |
| நாடிச்சக்கரம் | 2005 | 40-00 |
| அகத்தியர் நூல் திரட்டு | 2004 | 25-00 |
| குழந்தை பராமரிப்பு | 2005 | 15-00 |
| பாண்டுகாமாலை | 2000 | 40-00 |
| நீரிழிவு சிகிச்சை | 2005 | 100-00 |
| பதார்த்த குணபாடம் | 2006 | 160-00 |

❋❋❋

# 4448 வியாதிகள்* - ஒரு விளக்கம்

## பாகம் - 1

### உலக வாழ்த்தும், நூல் நுதல் பொருளும்

வரம் படைத்து இலங்குங் கீர்த்தி
மண்ணுலகேழும் வண்ணத்
தரம் படைத்து இலங்கும் என்ப
உண்மையாம் மனிதர் தங்கள்
சிரங்கநோய் தானே செப்பிச்
சேரும் நோயின் பேர் எல்லாம்
பரந்த நற் கல்வி யோடு
பண்பினா லுரைக்க லுற்றேன். (1)

***விளக்கம்:*** மேன்மை பொருந்தி விளங்கும் ஏழு உலத்தினும் உண்மையான மனிதர்களுக்கு சிரம் முதல் எல்லா அங்கங்களிலும் வரும் நோயின் பெயரை எல்லாம் என் அறிவினால் பண்போடு சொல்லுகின்றேன்.

### அவையடக்கம்

உரைக்கு மிக் குணத்தின் வன்மை
உண்மை வா கடத்தை யெல்லாந்
தரைக்கு மேலுரைப்பன் என்று
சாற்றுவது ஏதுக்கு ஒக்கும்
வரைக்கியல் பிரமன் சொன்ன
மாமறை நூலை மண் மேல்
உரைக்கியல் குழறிச் சொல் (இல்)
ஊமனார் விரைவுக் கொக்கும். (2)

---

**வைத்தியச்சுவடி. M. 162(b)*

ஊமனார் சொல்லிற் றென்ன
உரைப்பயன் போல வீசன்
வாமபாகத்தாள் போற்றி
மண்ணிலுண் டான நோயின்
நேம நா லாயி ரத்து
நானூற்று நாற்பத் தெட்டும்
ஆமநோ யின் பேர் எல்லாம்
அவனியில் உரைக்க லுற்றேன்.

இப்புவியில் மனிதர்களுக்கு ஏற்படும் நோய் 4448 பற்றிக் கூறுகின்றேன்.

***விளக்கம்:*** 14 படலங்களாக உள்ள 4448 வியாதிகள் 3 அங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி, சுரரோகம் முதல் முயல்வலி ரோகம் வரை கீழ் முகமாக (அதோங்கமாக) உள்ளவை 3123. நேத்திரரோகம் முதல் அசாத்திய கபாலரோகம் வரை உள்ளவை 299. விரண பேதம் முதல் தமூதாழை ரோகம் வரையில் 1026 ஆக மொத்தம் 4448 என்று ஜீவரட்சாமிர்தம் கூறுகிறது. (பக். 18, சுப்ரமணிய பண்டிதர் பதிப்பு) ஏனையவற்றை விரிவுரையில் காண்க.

விரித்திடும் வாத பித்த
சிலேட்டும வியாதி மூன்றில்
வருத்திடும் சல தோஷத்தால்
வண்மை மூன் றுரைத்த தென்ன
தரித்திடும் மீரேழ் நூலின்
தன்னி லெண் பத்தி ரண்டு
கருத்திடும் வாதக்கூறு
நோயெனக் கருதலாமே. (4)

***உரை:*** வாதம், பித்தம், கபம் என்று மூன்றாகக் கூறப்பட்ட முக்குற்றங்களால் ஏற்படும் பிணிகளில் நீர்க்கோவை வருத்தி எடுக்கும். அதன் அடிப்படை மூன்றாவதாகிய கபரோகம். அதைக்கூறி மருத்துவ நூல்களில்

இருக்கும் 1400 பிணிகளில் 82 வாதத்தின் கூறு கருமையான வண்ணம் என உரைக்கும். அக்கருமையான வாதத்தின் பகுதியை நோய் எனலாம்.

***விளக்கம்:*** பொதுவாக வாதம் 85, சித்தமருத்துவம் டாக்டர் குப்புசாமி முதலியார்,H.P.I.M., *(பக். 446)* யூகிமுனி வாதம் 80 என்றும், (டாக்டர் சண்முகவேலு,.H.P.I.M., பக். 383 நோய் நாடல் பாகம் 2) கூறி உள்ளனர். ஆனால் இதற்கு மாறுபட்டு 82 வாதம் என்று இந்நூலில் கூறப்பட்டுள்ளது. ஆனால் எண்ணிக்கையைத்தவிர, எவை எவை எனச் சுட்டப்பபடவில்லை. வாதத்தின் நிறம் கருமை எனவும், பித்தம் சிவப்பு என்றும், கபம் வெண்மை என்றும் மருத்துவ நூல்கள் கூறும்.

கருத்திடும் பித்தந் தன்னில்
கலந்திடு மீரேழ் நூற்றில்
வருத்திடு மெண்ப தென்ன
வாதத்தினுடனே மூன்று
சரீரமுத் துட்டி னங்கள்
தளர்ச்சியுஞ் சிறிதே காட்டும்
மருவிய பித்தந் தன்னில்
மருவு மின் னோவு தானே. (5)

***உரை:*** வறுத்திடும் கறும்பித்தம் 1400 வகைப் பிணிகளில் 80 வகை இத்துடன் வாதத்தொடர்புள்ளது மூன்று சேர்ந்து 83 ஆகும். பித்த வாத குணங்களால் சூடும் அதன் காரணமாகத் தளர்ச்சியும் சிறிது ஏற்படும். பித்தத்தின் தொடர்பால், நோவு பின்னால் உண்டாகும்.

***விளக்கம்:*** இங்கு கூறப்பட்ட 1400 வகைகள் விளக்கமாகச் சொல்லப்படவில்லை. பித்தம் 42 என்றும் 40 என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு பித்தம் 80 எண்பதாகக் கூறப்பட்டுள்ளது. வாதத்தொடர்பால் 3 சேர்ந்து 83 ஆனது. 42 வகை பித்தம் பற்றியவை விரிவுரையில் காண்க.

தானெனு மிரே ழாறு
தன்னிலெண் பத்து மூன்று
ஊனுயர் சீத ளத்தின்
உள்வினை யதிகஞ் செய்தே
ஈனமாய் உடலும் வற்றி
எழுந்த யின்னா வதெல்லாம்
தேனமர் மொழியாய் இன்னம்
சிலேட்டுமஞ் செப்ப லுற்றேன். (6)

***உரை:*** சிலேத்துமம் பற்றியது குறித்து, தேன்மொழியாய் கூறுகின்றேன். இக்கபமானது 20 வகைப்படும். இதில் 13 வகையானது கொழுப்பு தாதுவை உயர்த்தி, உள் உறுப்புகளான புப்புசம், இருதயம், பிருக்கங்கள் போன்றவைகளுக்கு மிக்கக் கெடுதல்களை உண்டாக்கும். இதன் காரணமாக உடல் இளைத்து, மிக்க துன்பங்களை அடையும்.

***விளக்கம்:*** கபரோகம் 21 பிரிவுகளாகும். முற்றான சிலேட்டுமந்தான் இருபத்தொன்று, முனி உரைத்த சொற்படி மொழியக் கேளாய் (முனி-யூகிமுனி) இதில் கபரோகம் 20 ஆகும். ஏறக்குறைய எண்ணிக்கை ஒத்து வருகின்றது. அட்டவணையில் காண்க.

உற்றிடும் சிரசு தன்னில்
உதித்தெழும் முன்னூற்றேது
மற்றது செவியி லெண்ணேழ்
வாயில் நூற் றைம்பத்தாறு
கற்றிடுங் கண்ணில் நோவு
கருதியே தொண்ணூற் றாறு
உற்றிடுங் கழுத்தி லாறேழ்
மூக்கில்மூ வொன்ப தன்றார். (7)

***உரை:*** தலையில் 307, செவி 56, வாய் 156, கண் 96, கழுத்து 42, மூக்கு 27.

***விளக்கம்:*** *தலையில் உள்ள பிணி வகைகள் 1008, செவி56, வாய் 156, கண் 96, கழுத்து 42, மூக்கு 27.*

***விளக்கம்:*** *சிரநோய் 1008 என்று சாம்பசிவம் பிள்ளை அகாரதி (பக்.3869) கூறுகின்றது. ஆனால் இந்நூலில் 307 என்று குறிப்பிடப்படுகின்றது. ஏனைய அட்டவணையில் காண்க.*

*என்றதோர் கன்னந் தன்னி*
*லென்பதாம் நோவு நாற்பத்*
*தொன்ற நெற்றி தன்னில்*
*உயங்குநா லெட்டு நோவு*
*துன்றுநற் பிடரி தன்னில்*
*சொல்லுதல் பத்து நோவு*
*வென்றிசேர் சேர்க்கையால் நூற்று*
*முப்பதாய் விளம்ப லாமே. (8)*

***உரை:*** *கன்னம் 1, நெற்றி 41, நாக்கு 8, பிடரி 10 ஆக 130 என்பதாகுக.*

*இதுபற்றி அட்டவணையில் காண்க.*

*விளம்பிடும் வாத நோவு*
*எண்பத்து நாலு மிக்க*
*துலங்கிய சன்னி முப்ப*
*தாம் குடல் வலவு எட்டு*
*களங்கமு முப்பத் தாறு*
*கரப்பனு மறுபத்தாறு*
*தளங்கொள் விப்புருதி நாலு*
*சாத்துதல் குருவி லெட்டு. (9)*

***உரை:*** *வாதநோய் 84, சன்னி 30, குடல் வலவு 8, களங்கம்36, கரப்பான் 66, விப்புருதி 4, குரு 8 என்று சொல்லப்படும்.*

***விளக்கம்:*** *இந்நூலில் பாடல் 4ல் எண்பத்திரண்டு கருத்திடும் வாதக்கூறு என்று சொன்னது. இங்கு வாதநோய் 84*

என்கிறது. இதை சாம்பசிவம் பிள்ளை ஒத்துக்கொள்ளுகின்றார். ஏனைய பிணிகளில் சன்னி 76 , பொற்கரப்பான் 90, விப்புருதி 18 என்று மாறுபடுகின்றார். இந்நூலில் கூறப்பட்ட வலவு, களங்கம், குரு என்பன ஏனைய மருத்துவ நூல்களில் இல்லை.

அய்யெட்டுப் பிளவை தானும்
அன்புட னுடலில் நிற்கும்
மையுற்ற புண்தா மெட்டும்
மகோதரம் முப்ப தென்ன
உய்யசிக் கிரி தானெட்டும்
மொன்பது முண்மை யாக
செய்யவண் டொருபத் தெட்டுச்
செப்புமவ் வளவு கிடம். (10)

***உரை:*** பிளவை 40, புண் 8, மகோதரம் 30, சிக்கிரி 72, வண்டு 18 என்று முறையாகச் சொல்லப்பட்டுள்ளது. சிக்கிரி, வண்டு என்பன மற்ற மருத்துவ நூல்களில் இல்லை. இவற்றின் பொருள் இன்னதென்று புலப்படவில்லை.

செப்புக சிலந்தி யெண்பத்
தேழினிற் செய்கை யாக
வெப்பும்எண் பத்தி ரண்டு
விளக்குமின் னோவ தெல்லா
மிப்புவி தன்னிலே தான்
இயம்புதல் தன்னைக் கேளாய்
தப்புவா தக்கூ றாகச்
சாற்றுவாய் தரணி மீதே. (11)

***உரை:*** சிலந்தி 87, வெப்பு 82, வலியினை அறிந்திடுக. அப்பு, வாதக்கூறாக இவைகளை உலகத்துக்கு எடுத்துக் கூறுவாயாக.

***விளக்கம்:*** சாம்பசிவம் அகராதியில் சிலந்தி 68 எனவும் (பக். 3869) வலிநோய் 46 என்றும் கூறப்படுகிறது. வெப்பு பற்றிக் கூறப்படவில்லை.

சாற்றுவா யைம்பத் தாறு
தானிவை வயிற்றி லென்னும்
ஏற்றமில் தண்டில் நூற்று
எழுபத்தஞ் சென்ன லாகும்
தோற்றமில் வானந் தன்னிற்
சொல்லுதல் அறுபத் தொன்று
சீற்றமா விரையிற் றானே
செப்புவ னிருபத் தஞ்சே. (12)

***உரை:*** *வயிற்றில் 56, முள்ளந்தண்டு 175 என்னும் குற்றமில்லாத ஆகாயக்கூறாகச் சொல்லுதல் 61, விரையில் 25, உதரரோகம் 16 என்று பலராமையா (பக்.5, வாதத்துக்காதி) கூறுகின்றார். முள்ளந்தண்டில் வரும் பிணிகளைப் பற்றிய விவரம் எதுவும் ஏனைய மருத்துவ நூல்கள் கூறவில்லை. அண்டரோகம் 2 என்பதாக சித்தமருத்துவம் (பக்.475) கூறுகின்றது. தேரர் காப்பியம் அண்டரோகம், 4 வகை என்கின்றது.*

செப்புக எரிப்பு நூறு
திகைப்பது தொண்ணூற் றொன்றும்
வெப்புமோ ரைம்பத் தாறு
விளங்குவெள் ளெழுத்து மென்பாம்
ஒப்பிலா அசுர யொன்று
உண்மைகா மாலை யெட்டு
தப்பிலா லோடு பாம்பு
சாற்றுத, ஒலி ருபத், தேழே. (13)

***உரை:*** *எரிப்பு 100, திகைப்பு 91, வெப்பு 56, வெள்ளெழுத்து 1, (9) காமாலை 8, பாம்பு சாத்தவி 27.*

***விளக்கம்:*** *எரிப்பு, திகைப்பு, வெப்பு என்பன பற்றி விளக்கம் கூறப்படவில்லை. காமாலை 13 என்பதாக ஜீவ ரட்சாமிர்தம் கூறுகின்றது. திவ்விய சர்ப்பம் 8, பௌசாதி சர்ப்பம் 5 என்பவைகளைச் சொல்லுகின்றது.*

*சாற்று முட்டிருபதா முளணடி*
*தனி லெண்பத் தொன்று*
*ஆற்றல் சேர்த்தியன்*
*மறுகிய வழலை நாலு*
*மாத்தொரு மாட்டின் னோவு*
*வண்மையா மொரு நூற்றெட்டு*
*தோற்றுஞ் செஞ்சாலி தோவு*
*சொல்லுந லறு பத்தொன்றே.* *(14)*

**உரை:** வழலை 4, நோவு 108, செஞ்சாலி நோவு 21, 81 (இன்னது என்று அறிய முடியவில்லை) ஜீவரட்சாமிர்தம் வழலை, கருவழலை என்ற இரு பிரிவுகளைக் கூறுகின்றது. வழலை கடித்தால் கடிவாயில் இரத்தமும், வாயில் அரற்றலும் உண்டாகும். கரு வழலைக்கு காங்கையோடு அதி வியர்வையும், உள்ளங்கையில் சிவப்பும் கோழையால் மார்பில் அடைப்பும் பிறக்கும்படிச் செய்யும்.

*என்றுரை ஈரேழ் நூற்றி*
*லேறுதல் பத்து மூன்று*
*நன்றுசேர் பித்த ரோகம்*
*நாடிநீ ரறிந்து கொள்ளும்*
*நின்றுட னுட்டி ணங்கள்*
*நிகழ்த்துதல் தளர்ச்சி நெஞ்சில்*
*ஒன்றுதான் வாயி தொன்றில்*
*ஒழிந்திடு முண்மைதானே.* *(15)*

**உரை:** 1400 பிணிகளில் பித்தரோகம் 13, இதனை நாடியால் அறிந்துகொள்ளவும். பித்தரோகம் உடலில் வெப்பம் அதனால் தளர்ச்சி, வாயில் ஒன்று, நெஞ்சில் ஒன்று என்று உண்மையைச்சொல்லுங்கள்.

**விளக்கம்:** பித்தம் 48 என சாம்பசிவமும், 42 என யூகியும் கூறுவர் என்றாலும் இவை அனைத்தும் ஐவகையான பித்தத்தின் வேறுபாடுகளே.

உண்மையாங் காலி லேனை
யுள்ளொரு நூற்றொன் றாகும்
வெண்மையா முடலில் தானே
விளம்புத லிருநூற் றொன்று
தண்மையாம் குறுக்குத் தன்னில்
செப்புக முன்னூற் றாறு
வண்மையாந் தனத்தில் தானே
வரைந்தநோய் ஆ(வ) தொன்றே. (16)

**உரை:** காலில் 101, உடலில் 201, குறுக்கு 306, தனம் 1.

ஆனாறு(ம்) உந்தி தன்னில்
அளவிலா விருபத் தொன்றும்
வேறான முதுகு தன்னில்
விளங்குங்கா ணிருபத் தொன்று
பேரான பிடரி தன்னில்
பிச்சிடி லெழுபத் தஞ்சு
மாறான கைக்கீல் தன்னில்
வந்ததைப் பத்து நான்கே. (17)

**உரை:** தொப்புள் 21, முதுகு 21, பிச்சு 75, கைக்கீழ் பூட்டு(கீல்) இவற்றைப்பற்றி விரிவானபடி எதுவும் இல்லை.

ஐம்பதே பத்து மூன்று
அவர்முலை யகல மார்பில்
தும்பியைப் போல்து ளைத்துத்
துயர்மிகு மடியில் வீழ்தல்
நம்பியே யிரும லென்ன
நடத்திய சுவாச காசம்
கும்பம்பன் னான்கு முன்னூற்
கருவினா லுரைக்க லுற்றேன். (18)

**உரை:** அகன்ற மார்பில் பெண்ணின் தனம் தும்பியைப் போல் துளைத்து, மடியில் வீழ்ந்துவிட ரேசகம், கும்பகம்,

பூரகம் என்ற மூன்றுவிதமான காற்று முறைகளில், துயர் மிகுந்து இருமல், இரைப்பு என்பதாகக் கூறப்படும்.

***விளக்கம்:*** *1 மணிக்கு 2½ நாழிகையாக நாழிகை 1 நாளைக்கு உள்ளது. (பக்.* Hand Book of Indian Medicine*) 60 நாழிகைக்கு 21,600 சுவாசம் நடைபெறுகின்றது. சுவாச கேந்திரம் 12 விரல் அளவு உள்ளது. இதில் 21,600 சுவாசத்தில் 14,400 உள்ளுக்கு செல்லுகின்றது. 7200 வீணாகப்போகின்றது. இவைகளால் கபரோகம் ஏற்படுவதால் இருமல், இரைப்பு என்பன ஏற்படுகின்றன.*

குறியுறு செகத்திற் றானே
குறித்தநா லாயி ரத்தின்
உரியவே வருநா னூற் றனூற்றோடு
(உள) நாற்பத்தெட்டு நோயின்
பொறிகளா திகளிற் கூடிப்
புராரிதன் பாதம் போற்றி
நெறியுற விரித்த தானே
நிகழ்த்துமா யிரத்தொ டெட்டே. *(19)*

***விளக்கம்:*** *4448 வியாதிகளைப்பற்றி* History of Indian Medicine (page 613) From these vegitables become evolved under six classes of Tests and of 3300 general mains ailments under all the above five divisions have been computed to be 4448 in all.

Hand Book of Indian Medicine: It has been described that the numbers of diseases comes up to 4448. They have classified then as those affecting the different parts of body. They have also analysed than as far as possible to be traced to the doshes.

*சங்கை கேணோய் நான்றனித்த நாலாயிரஞ்*
*சங்கை கேணானூற்று நாற்பத்தெட் டென்பர்காண்*
*சங்கை கேளிவ்வளவுத் தானுடலி லுண்டாகிற்*
*சங்கை கேளெல்லாந் தவிடு பொடியாமே. -**திருமூலர்.***

ஆயிரத் தெட்டு நோவின்
அலங்கார வல்ல பத்தின்
மாயிரு விசைமட் டேறும்
மலர்வண்ணன் வகுத்த நோய்கள்
ஆயதோர் வினையா லுரைத்து
அறுபத்தெட் டியம்பு நோயில்
பாடியக் காவிய பக்ஞ்
நூற்றெட் டென்றோதே. (20)

***உரை:*** நுகர்ந்திடும் 1008 வலிகளில் அழகாய் உள்ள பத்து வாயுவின், மிக்க வேகமாய் பிரம்மதேவன் படைத்தபடி அவரவர் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடி 68 என்பதான நோய் வகைகள், பத்துப் பத்தாக 108 என்று காவியமாகச் சொல்லுக.

***விளக்கம்:*** இங்கு பாவம், புண்ணியம் என்பன பிறப்புத் தொடர்பான நோய்களைக் குறிக்கும். பத்து வாயுக்களால் 108வகையான பிணிகள்; அதில் 68 பிறப்பு தொடர்பால் உண்டாவன.

நூற்றுட னெட்ட தாகி
நுகர்ந்திடும் வியாதி தன்னைப்
போற்றிடும் முப்ப தென்று
புகன்றனர் நூலின் மிக்கோர்
சாற்றிய நோவுக் கெல்லாம்
தலைவனாம் வாத பித்தம்
சிலேத்துமங் கண்டு பார்த்து
திரிவித வியாதி யென்றே. (21)

***உரை:*** குறிப்பிட்ட 108 வகைகளில் 30 மிகவும் முதன்மையானவை. வாத பித்த கபம் என மூன்றாகப் பகுத்து 3 வகை என்றனர்.

திரிவித வியாதி தன்னில்
செப்புவேன் வாத மென்க

குறியுறு சிரசில் பத்து
லா குலாவியே செய்யில்நாலு
நெறியுறு வாயிற் பன்னேழ்
கழுத்தினோர் மூவேழ் கண்ணிற்
செரியுறு காதிற் தோன்றும்
செப்புக விரண்டு நூலே. *(22)*

***உரை:*** முக்குற்றங்களில் வாதம் என்று கூறப்படுவன. தலையில் 10, செய் 4, வாய் 17, கழுத்து 21, கண், காது 2,2.

***விளக்கம்:*** நோய் நாடல் பாகம் 2 (பக். 418) படி வாதம் தலையில் 3, செவி 4, வாய் 2, கண் 6, கழுத்து 2 என்று சொல்லப்படும்.

செப்புக விரண்டு மூக்கில்
செறிந்தகன் னத்தில் நான்கு
மெய்ப்புறு மிரண்டு நெற்றி
விளங்கிடும் பிடரி யொன்று (ஆம்)
ஒப்புக புயத்தி லேழும்
உரைத்திடும் வாத பித்தம்
தப்புறு வாத சன்னி
தானொரு பத்து மூன்றே. *(23)*

***உரை:*** மூக்கு 2, கன்னம் 4, மெய் 2, நெற்றி, பிடரி 1, புயம்7, வாதபித்தம் 13, வாதசன்னி 13.

***விளக்கம்:*** மூக்கில் வரும் பிணிகள் 7. (சித்தர் அறுவை மருத்துவம் பக். 136) கூறுகின்றது. நெற்றி 26, பிடரி 88 என மாறுபடுகின்றது. வாதபித்தம், 6 அதிகரிப்பதால் சிலேத்துமம் குறைவதால் உண்டாவது கண்டகுப்ச சன்னிபாத சுரம் என்று சீவரட்சாமிர்தம் கூறும் (பக்.22) தலைநோவு, மூர்ச்சை, வாந்தி, எரிச்சல், சோர்ந்துவிழுதல், தொண்டை வரளல், வாயுவால் எந்த உணவிலும் விருப்பு இன்மை, கீல்கள் நோவு, அசதியான தூக்கம், நீர்வேட்கை, பிரமை, மயிர் சிலிர்ப்பு, கொட்டாவி, பிதற்றல் என்னும் இக்குணங்களை

உண்டாக்கும் என சீவரட்சாமிர்தம் கூறும். வாதம் 20, பித்தம்24, கபம் 20 என்று சித்தமருத்துவம் (பக். 4) கூறும். வாத, பித்தக் கலப்பால் 13 வகையான சுரங்கள், சன்னிகள் ஏற்படும் என இந்நூலில் கூறப்படுகின்றன.

### 4448 வியாதிகள் வகை - விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| வாதம் | 84 | மூக்கு | 10 |
| பித்தம் | 48 | விரணம், காயம் | 700 |
| வாயு | 300 | கடிவிஷம் (பூச்சி) | 500 |
| சுரம் | 85 | கொப்புளம், கட்டி | 60 |
| கண்நோய்கள் | 96 | குழந்தைநோய் | 100 |
| தோல் நோய்கள் | 90 | இருமல் | 10 |
| சன்னி | 13 | வாந்தி | 5 |
| நா, பல் | 96 | மேகரோகம் | 20 |
| விடக்கடி (விலங்கு) | 96 | க்ஷயம் | 7 |
| கிராணி | 25 | மூலம் | 9 |
| அதிசாரம் | 25 | வலி (நரம்பு) | 6 |
| பிளவை | 12 | அவசரம் | 7 |
| குடற்புழு | 6 | குட்டம் | 15 |
| காதுநோய் | 10 | மலடு | 6 |

(DR. T.G. ராமமூர்த்தி அய்யர், The Hand Book of Indian Medicine, Sri Vani Vilas Press, Fort, Erode, பக். 166)

சாம்பசிவம்பிள்ளை அகராதி - பக்கம் 3869, பாகம் 5.

| | | | |
|---|---|---|---|
| வாதம் | 84 | பல்நோய் | 75 |
| பித்தம் | 48 | மாலைக்கண் | 20 |
| கபம் | 96 | அதிசாரம் | 25 |
| தனுர்வாயு | 300 | கட்டி | 12 |
| சயம் | 7 | கிருமிநோய் | 6 |
| பெருவயிறு | 8 | மூட்டுநோய் | 30 |
| சூலை | 200 | முதிர்நோய் | 20 |
| பாண்டு | 10 | சத்தி | 5 |
| கண்ணோய் | 96 | கல்லடைப்பு | 90 |

| | | | |
|---|---|---|---|
| சிலந்தி | 68 | கிராணி | 25 |
| சன்னி | 76 | திமிர்நோய் | 21 |
| வழலை | 95 | மேகம் | 5 |
| சுரம் | 64 | நீராம்பல் | 10 |
| மகோதரம் | 7 | காதுநோய் | 10 |
| வீக்கம் (தலை) | 5 | விக்கல் | 10 |
| உதிரநோய் | 16 | அரோசகம் | 5 |
| பிளவை | 10 | மூக்கறுப்பான் | 10 |
| படுவன் | 11 | கடிவிஷம் | 500 |
| பீலி | 8 | குத்துவெட்டு | 700 |
| உருவகியம் | 5 | கிரந்தி | 48 |
| பொற்கரப்பான் | 90 | துடிநோய் | 100 |
| குட்டம் | 18 | பிள்ளைநோய் | 100 |
| கதிர்வீச்சு | 3 | குமுளி | 7 |
| மதிவெட்டை | 5 | விப்புருதி | 18 |
| இசிவு | 6 | விபாகம் | 16 |
| மூர்ச்சை | 7 | பிறநீர்க்கோவை | 200 |
| வலிநோய் | 46 | நடுக்கம் | 6 |
| கழலை | 10 | | |
| பீனிசம், கடிவிஷம் | 76 | | 4,448 |

**இந்நூலில் கூறப்பட்ட நோய்கள்**

| | | | |
|---|---|---|---|
| நீர்க்கோவை | | விரை | 25 |
| வாதம் | 82 | ஆகாயம் | 61 |
| பித்தம் | 13(93) | எரிப்பு | 100 |
| கபம் | 20 | திகைப்பு | 91 |
| தலை | 307 | வெப்பு | 86 |
| செவி | 56 | வெள்ளெழுத்து | 2 |
| வாய் | 156 | காமாலை | 8 |
| கண் | 96 | பாம்பு | 27 |
| கழுத்து | 42 | வழலை | 4 |
| மூக்கு | 27 | கால் | 101 |
| கன்னம் | 41 | உடல் | 201 |
| நெற்றி | 8 | குறுக்கு | 300 |

| | | | |
|---|---|---|---|
| பிடரி | 10 | தனம் | 1 |
| கை | 130 | தொப்புள் | 21 |
| வாதநோய் | 84 | முதுகு | 21 |
| சந்நி | 30 | பிச்சு | 75 |
| குடல் வலவு | 8 | கைகீழ் | 54 |
| (பிதுக்கம்) | | வாதக்கூறு | |
| களங்கம் | 36 | தலை | 10 |
| கரப்பான் | 66 | செவி | 4 |
| விப்புருதி | 4 | வாய் | 17 |
| குரு | 8 | கழுத்து | 21 |
| பிளவை | 40 | கண் | 2 |
| புண் | 8 | காது | 2 |
| மகோதரம் | 30 | மூக்கு | 2 |
| சிக்கரி | 72 | கன்னம் | 4 |
| வண்டு | 18 | மெய் | 2 |
| சிலந்தி | 17 | நெற்றி | 1 |
| வெப்பு | 82 | பிடரி | 1 |
| வலி | | புயம் | 7 |
| வயிறு | 56 | வாதபித்தம் | 13 |
| முள்ளந்தண்டு | 175 | வாதச்சன்னி | 13 |

ஜீவரட்சாமிர்தம்-சுப்ரமணியபண்டிதர் (பக். 18)

14 படலங்களாக உள்ள 4448 வியாதிகள் 3 அங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1) சுரரோக முதல் முயல்வலி ரோகம் வரை கீழ் முகமாக (அதோங்கமாக) உள்ளவை 3.123.

2) கண் வியாதி முதல் அசாத்திய மூளை ரோகம் வரை உள்ளவை 299. மேல்முகமாக. (ஊர்த்துவாங்கமாக)

3) விரண பேதம் முதல் தழுதாழை ரோகம் வரை உள்ளவை 1,026 (உபயாங்கம்) மொத்தம் உள்ளவை 4,448.

ஜீவரட்சமிர்தம் - ஆறுமுகம்பிள்ளை (பக். 177)

| | | |
|---|---|---|
| படலம் 2: | சுரரோகத்தொகை | 312 |
| | கிளைத்த ரோகம் | 251 |
| படலம் 3: | சுரரோகத்தொகை | 312 |
| படலம் 4: | தாகரோகம் முதல் விஸ் பஷ்டம்மா சீரணரோகம் ஈறாயுள்ள ரோகம் | 87 |
| | கிளைத்தரோகம் | 58 |
| படலம் 5: | மூத்திர காதரோகம் முதல் வலிகுன்ம ரோகம் வரை | 134 |
| | கிளைத்த ரோகம் | 158 |
| படலம் 6: | ஆறாக ரோகம் முதல் ஒட்டு ரோகம் வரை | 130 |
| | கிளைத்த ரோகம் | 114 |
| படலம் 7: | விஸ்போட ரோகம் முதல் சாமானிய கிருமி ரோகம் வரை | 48 |
| | கிளைத்த ரோகம் | 102 |
| படலம் 8: | வாத ரோக பேத முதல் பேய் வாத ரோகம் வரை | 89 |
| | கிளைத்த ரோகம் | 65 |
| படலம் 9: | மகாவாத பேதம் முதல் சாத்தியா சாத்திய விஷபாக ரோகம் வரை | 544 |
| | கிளைத்த ரோகம் | 162 |
| படலம் 10: | அதிதூல ரோகம் முதல் அசாத்திய பூத நிதானம் வரை | 163 |
| | கிளைத்த ரோகம் | 162 |
| படலம் 11: | உன்மாதரோகம் முதல் கடைவிழியில் கண்ணோய் வரை | 205 |
| | கிளைத்த ரோகம் | 104 |
| படலம் 12: | கர்ண ரோகம் முதல் அசாத்திய கபாலரோகம் வரை | 105 |
| | கிளைத்த ரோகம் | 60 |
| படலம் 13: | விரணபேத ரோகம் முதல் சந்நிபாத யோனி ரோகம் வரை | 329 |
| | கிளைத்த ரோகம் | 48 |

| | | |
|---|---|---|
| படலம் 14: | விஷபேத முதல் ஆரூட | |
| | நிதானம் வரை | 388 |
| | கிளைத்தரோகம் | 140 |
| படலம் 15: | கீடாதி பேதம் வரை | |
| | எலிவிஷ பேத ரோகம் வரை | 63 |
| | கிளைத்தரோகம் | 58 |
| | மொத்தம் | 4,448 |

**அங்காதி பாதம்**

நவிலும் வெம்பிணி நாலாயிரத்தின் மேல்
அவமில் நானூற்று நாற்பத்தெட்டாம் இவை
பலவுடம்பில் பயிலுங் கணக்கினை
குவலயத்தில் குறிக்கு மனிதர்க்கே. (103)

மனிதர் சென்னி மருவு முன்னூற்றேழு
கனி கொள் வாயிற் பதினெட்டுக் காணுறும்
இனிய நாசி இருபத்தேழாஞ் செவி
பிணி வரை ஐம்பத்தாறு எனப் பேசினார். (104)

பேசிய நோய்தான் கண்ணில் பெருகிடும் தொண்ணூற்றாறு
மாசிலாப்பிடரி தன்னின் மருவிடு நோய் பத்தாகும்
ஏசில் கன்னத்தின் முப்பத்திரெண்டென வியம்பும் வேதம்
காசணி முலையாய் கண்டத்தாறு என்பர்
கலைவல்லோரே. (105)

கலை வல்லோருந்தி தன்னினூற்றெட்டு கைகடம்மில்
நிலைபெறு நூற்றி முப்பதாம் என்பர் நெடுங் குதத்தில்
உலவுநோய் நூற்றொன்றாகும் ஒண்தொடி மானே கேளாய்
வலமிகு தொடையில் தொணூற்றொன்றென
வகுத்திட்டாரே. (106)

வகுத்திடு முழங்கால் கெண்டை மருவுநோய் நாற்பத்தேழு
பகுத்திடு இடை நூற்றைந்தாம் இதயநூற்றாறு பற்றும்
தொகுத்திடு முதுகு தன்னில் ஐம்பத்திற்றிரண்டிறாச்
சொல்வார்
சகத்தினி எவரும் போற்றத் தகுளழில் தையலாளே. (107)

ஐதயலே உள்ளங்காலில் சாற்றுநோய் முப்பத்தொன்றாம்
ஐயமில் புறங்காறன்னி அடையுநோய் இருபத்தைந்தாம்
மெய்யுறுப்பு எங்குமாகுக,மேவியே இருக்கு நோய்கள்
பையவே பார்க்கின் மூவாயிரத்தொடு பகரு நூறே. *(108)*

நூறுமெய் இனி எண்சாண் நுவனா ஆயிரத்தின்மேலும்
கூறுநானூற்று நாற்பத்து எட்டு எனக் குறிப்பினாலே
தேறுநூற்கடல் கடந்து தெரிந்த மாமுனிவர் சொன்னார்
மாறிலா உலகந்தன்னில் வாழ்ந்திடு மாந்தர்க்கே. *(109)*

மாந்தரா னவர்க்கெல்லாம் வரும்பிணித் தொகை இதாகும்
ஆய்ந்தவை பார்க்கும் போதில் அந்த தானங்கள் தோறும்
ஏய்ந்திடு வாதபித்த வையத்தினில் அசைந்து தோன்றும்
வாய்ந்திடு உடம்பு தன்னை வருத்திடும் வன்மை
கொண்டே.*(110)*

**பொருள்:-**

| | | | |
|---|---|---|---|
| சென்னி | *307* | குதம் | *101* |
| வாய் | *18* | தொடை | *91* |
| நாசி | *27* | முழங்கால்கெண்டை | *47* |
| செவி | *56* | இடை | *105* |
| கண் | *96* | இதயம் | *106* |
| பிடரி | *10* | முதுகு | *52* |
| கன்னம் | *32* | கால் | *30* |
| கண்டம் | *6* | புறங்கால் | *25* |
| உந்தி | *108* | மெய் உறுப்பு | *3,100* |
| கைகடம் | *130* | | |

**தேரையர் வாகடம்** - *பழனி (பக்கம்: 223)*

**நோய்வகை பரம்:**

**கழுத்துக்கு மேல் உள்ள நோய்**

பெருகிய கழுத்துப் பிராண தாரையில்
மருவிய வியாதியை வகையுறச் சொல்லுவேன்

உச்சியில் வாதம் ஒருதலைநோவு
உச்சியில் பொடுகு முதிர்ந்திடு சூலை
சூரியவாதம் கழற்புழு வெட்டு
பாரியகடிவகம் பக்கமிற்கடிவகம்
சந்திரரோகம், தலையழி சூலை
இந்த விதத்தில் எழு விரிரோகம்
கன்ன சூலை, கன்ன விப்புருதி
நாசிகா பீடம் நாசிகா கிருத்தியம்
துட்ட பீனிசம் தோடப்பீனிசம்
மட்டுறுநாசி வரு நாசிமந்தம்
அழுகல்நாற்றம் அந்தரியநாற்றம்
முகத்தில் பருவும் மூக்கினில் பருவும்
செவிதனில் நோவு, திகழ்முகரோகம்
செவிதனில் அடைப்பி சிவாய எழுச்சி
அக்கிரரோகம் இருதய பாகம்
சுக்கிரரோகம் சொல்பாக விரணம்
அன்னகோபம், அருணதி மந்தம்
தென்னதி மந்தம், திமிரம், படலம்
சுரூப செலரூபம் சுழல்கண் கட்டியும்
பருவு முத்திப்பாக நீர்ப் பாய்ச்சல்
மாலைக்காசம் வரும் வாலகாசம்
வாத காசம் வரும் பித்த காசம்
நீல காசம், நீரொழி காசம்
செவ்வேர் படர்ச்சி, சிறந்த பில்லம்
பரமரோகம், புகர்அனற் சுக்கிரன்
பெரு பொய் ஆகல் சிறுபொய் ஆசல்
தந்த ரோகம் தந்த சூலை
தந்த வாதம் தந்த அற்புதம்
பல் குத்து பல்லரணை பல்கோவை
நாவில் தடித்தல், நாவில் கிரந்தி
நாவின் புற்று, நாவில் விப்புருதி
கழுத்தில் சுற்றியதோர் கண்டமாலை
மற்றும் வியாதி வர்க்கம் பலப்பல.

## கழுத்துக்குக் கீழ் உள்ளவை

சீரிய கழுத்தின் கீழுள்ள பிணியைத்
தீர்வதறிந்து திசை பெறச் செப்புவேன்
பாரிய கடியும், பரிசில் பிளவையும்
பெருகிய கெண்டை பெருந்தெழு கவுசையும்
இருமலும் தும்மலும் ஈளையும் வளமாய்
நீருள் மிகுந்து நிறைந்தெழு கோவையும்
பாரொடு மொழியென ப்பரந்தெழு சூலையும்
தன் நினைவின்றி தவிக்கும் பித்தமும்
உண்ணினை அன்றியே உயர்த்தெழு வாதமும்
பின் முன்னறியாப் பேதையை போலவும்
மறக்க முறக்காட்டி மகத்தானமய்யும்
சொன்னது மறியாத துணிச்சிச வலியும்
மிஞ்சிய தோடமும் மெய்யுறு குன்மமும்
அஞ்சிய ஆமைபோல் ஆழற் பீலிகையும்
துஞ்சிய நமுவையும் துகைப்பெரு வல்லையும்
மிஞ்சிய வாயுவு மிகு கிராணியும்
துன்னிய மற்ற சத்தொத்திய மூலமும்
பேருலகறிய பெருத்த மகோதரம்
பெரு வயிறானதும் பித்த பாண்டுவும்
பெருநீர் செருகி வரு நீரடைப்பும்
மந்தார காசம் மத்தமாய் சரீரமும்
சிந்தார் தாகம் திடகைகால் எரிப்பும்
சித்திர கன்னம் திடுக்கிடும் விக்கல்
அருசியும் காச சுவாச முந்தியல்
பிரமேகத்துடன் ஈளையும் மகாசீத
காசமும், மதி சோணிதமும் எடுக்கின்ற
வேண வாயசுடன் முயங்கிய மயக்கமும்
முடுதலை நனைத்த உளச் சோம ரோகமும்
மடவது சொன்ன மரணப் பிரமேகமும்
உதிரச் சயமும் உயர்ந்த நீர்க்கடுப்பும்
கண்டந் தன்னில் கவிந்த அடக்கமும்
அண்டத்தில் வாயுவும் அமைந்த சூலையும்

உந்தியில் பற்றிய உட்டணந் தன்னில்
வந்திடும் சலமது வகைபதி னெட்டும்
மேலாய் இருபதும் சுப்பிர மேகமும்
நாலாறு விதமாய் நாடிய பித்தமும்
மந்தாக்கினியும் மதுமுறு வேர்வையும்
சுக்கில மழிந்திடத்தோன்றிய மலமே
இந்நிலந்தன்னில் எண்பது வாதமும்
சன்னிவிதங்கள் தான் பதிமூன்றும்
விறப்பந்தன்னில் மிகு மருந்தீடும்
அரைப்பத்திய நோய் அழுகியகாலும்
பத்தோடுஎட்டு பற்றிய குட்டமும்
மத்தொடூர் வட்டமுகிய சிலந்தியும்
படுவான பவுத்திரம் பரந்த தாபனம்
முழவின் வெளியா மூலத்தின் கூறும்
ஒண்ணுதல் கூனலும் யோனிச் சூலையும்
எண்ணிய மாறலும் எழூந்த கரங்களும்
கண்டமாலை கலந்தொளி மறைத்தல்
மிண்டத் தடுக்கல், மேற்சர மாலையும்
வாந்தியும், பிராந்தியும், வாலகாசமும்
எலிக்கடியுடனே இரைத்தலும் இளைப்பும்
நால்வகையால் வரு கரப்பன் விதங்களும்
இவ்வகை மூன்று கரப்பன் சிலந்தியும்
ஆக இரண்டு அமுகிய குருவும்
மிகுபணை இந்திர விடபாக விதங்களும்
தொடை வாழை தன் அங்க படிகை
புருட கிரந்தி புரை விப்புருதி
பூதலந்தன்னில் பொத்திய பிளவை
சீதரு ஊனலும் சீறிய வாளத்தியும்
தப்பாணி ஆனது ம் தருநெருப்பேதமும்
ஒப்பாரு மின்னாரும் உண்ண தல மேனியும்
அந்தரீயமது லாகாத தோடமும்
சந்தமரிக்க நந்தருண ஓலையும்
தகையுறு சுமைகளால் சரிந்தவாயுவும்
உகளறு மாளியொடு தனுர்வாதம்

கோவையின் வாதம், கூறலும்பாடல்
ஆரு மாதாங்கம் அடைவிது தானே.

பெரிய கடிகள், பெரிய கவுசை, பிளவை, கெண்டை, இருமல், தும்மல், ஈளை, நீர்க்கோவை, சூலை, பித்தநோய், வாதப்பிணிகள், சிசுவலிநோய், தோடப்பிணிகள், குன்மம், பீலிகை, நமுவை, வல்லை, மீசுரவாதம், கிராணி, மூலம், பெருவயிறு, பெருத்தவயிறு, பித்தப்பாண்டு, நீர்செருகல், நீள் அடைப்பு, மந்தாரகாசம், உன்மாதம், எரிவு, நீர்வேட்கை, கைகால் எரிச்சல், சித்திரக்கன்னம், விக்கல் இருமல், மூச்சு, பிரமேகம், ஈளை, மகாசீதகாசம், வீட்டு விலக்கு, நோய்கள், மயக்கம், சோமரோகம், மரணப் பிரமேகம், உதரசயம், நீர்க்கடுப்பு, தொண்டை அடைப்பு, அண்டவாயு, சூலை உந்தியில் உள்ள 18 வகை நீர்ப்பிணிகள், 20 வகை பிரமேகம், 24 வகை பித்தம், பசிக்குறைவு வியர்வை ஒழுக்கு, சுக்கில அழிவு, 80வகை வாதம், 13 சன்னிகள், மருந்தீடு பிணிகள், அபத்தியத்தால் ஏற்படும் நோய்கள், கால் அழுகல், 18 குட்டம், அழுகிய சிலந்திகள், பவுத்திரம், தாபனம், மூலமுளை, கூனல், யோனிச்சூலை, மாறல் சுரம், சுரங்கள், கண்மாலை, கண் ஒளி மறைத்தல், கக்குதல், மூர்ச்சை, பாலகாசம், எலிக்கடி, எலிக்கடியால் ஏற்படும் இரைப்பு, என்புருக்கி, 4 வகைக் கரப்பான், மூன்றுவகைக் கரப்பான், சிலந்தி, அழுகிய கட்டி, பருத்த இயந்திரங்களால் காணப்படும் நோய்கள், விடபாக நோய்கள், தொடைவாழை, கபடிகை, ஆண்கிரந்தி புரை, விப்புருதி, பிளவை, சீழ்தரும் ஊனல், வாளத்தி தப்பாணி, தீப்புண்கள், இளைப்புத்தரும் நோய்கள், சூலை முடக்குவாதம், தனுர்வாதம், சிற்றென்புக்கோவை.

வானின் பொன்னின் வரையது தன்னின்
ஈன்றிடு உலகை ஏக பராபரம்
மொழிந்த மறைநூல் முறையின் படியே
தெளிந்த குறுமுனி செப்பினன் புவியில்
பண்டு முன்செய்த பாவ வினையால்

கொண்டிடு நோய்தான் குணமது தானும்
நாலாயிரத்தின் நானூறு அதனின்
மேலா நாற்பத்தெட்டு வியாதியும்
பூவுலக அதனில் பூண்டிடும் பிணிகள்
மேவு முன் நூற்படி விவரமுரைத்தார்
சுரமது தானும் தோன்றிடு நாற்பது
உரமுள சன்னி ஓர் பதிமூன்று
மதித்திடும் தோட வகையது ஏழு
அதிர்ந்திடு மெய்யை அதிசாரம் ஆறு
ஆக சுரந்தான் அறுபத்தாறும்
மேக இருபதின் மேலே ஒன்று
பலத்தை அழித்திடும் பாண்டினில் இருபது
குன்மம் எட்டு குட்டமீ ரொன்பது
வன்மமான வலி இருக்காது
மூலம்நூறு மூண்டிடு மெய்யில்
சூலை தன்னில் சூழ்ந்திடு இருபது
வாதந்தன்னில் வகுத்திடு எண்பது
மீதே பித்தம் வீழ்ந்திடு நாற்பது
சேத்துமத்தில் சேர்ந்திடு நூறு
ஆற்றுமத்தில் அணுகிய ரோகம்
ராச நோவில் நவின்றிடுமாறு
காசம் எட்டு கடுமூச்சு ஒன்பது
சிரமது தன்னில் சேர்ந்திடு நோய்தான்
இருநூற்று இருபது என்றே விளங்கும்
தோன்றிய விழியில் தொண்ணூற்றாறு
என்றிடும் செவியில் இருபத்து மூன்று
வாசம்புரியும் வளர்ந்திடு நாசியில்
நேச முடனே நிறைந்திடு இருபது
வடிவுள வாயில் வரும்பிணி எழுபது
தந்தந்தன்னில் சாற்று இருபது
வந்திடும் எயிறில் வரு பதினாறு
நாவது தன்னில் நாற்பத் தொன்பது
மேவு சிறு நாவில் விளங்கிடுமாறு
தொண்டை அதனில் சூழ்ந்திடும் பிணிகள்

கண்டம் வரைக்கும் கழறு நூற்று இருபது
ஓங்கிய தோளில் ஓர் பதினெட்டு
தாங்கிய மார்பில் தரித்த மூவேழு
இதயந்தன்னில் இருபத்தொன்று
தருமலர் தன்னில் சாற்றிடு ஏழு
குடலினில் முன்னூற்று இருபது குறியா
மிவடஞ் சிறுகுடலில் நூற்றொருபது
நாவியைச் சூழ நவின்ற முன்னூற்றின்மேல்
ஓவியமாக குறித்திடு இருபது
நடுவில் ஈரெட்டு நறுதம் ஒன்பது
குய்யமதனில் குறித்திடு நூறு
மெய்யு மண்டை வினை பதினைந்து
அந்திரமாறு அற்புத அஞ்சு
யந்திரி இந்தி லிருபத்தாறு
மூலாதாரத்தில் மூன்றெட்டதாகும்
மேலாய் பவன மீதினில் நாற்பது
தொடையது தன்னில் தோன்றிடு முப்பது
நடை எனும் முழந்தாள் நாலைந்தென்னும்
அடியது தன்னில் அறுபத்து மூன்று
மூளையைப்பற்றி முன்னூற்றறுபது
கோளை எலும்பில் கொண்டது நூறு
நரம்பது தன்னில் நாடியிடும்வினை வீதம்
சிரந்தாள் வரைக்கும் சிறந்திடும் கேள்
இருநூற்றிருபத்து எட்டு நோய் என்னும்
பருவ மாங்கிஷத்தில் பற்றிய ரோகம்
துருவமாய் மூன்றெழு விதமா என்பார்
நறுசோதரத்தில் ரெண்டு நூற்றைந்து
தசையினில் வந்து தரித்திடு எண்பது
பசையுமும் ரோமம் பற்றிடு முப்பது
ரண நோய் தன்னில் ரெண்டு நூறதன்மேல்
ஆனவுடன் ஐம்பத்தொன்பதாம் என்ன
இவ்வகை சூழ இருந்திடும் பிணிகள்
அவ்வியமா இன்னமும் கூடிடும் விவரம்
கடிவிடம் அதனின் கருது நூற்றறுபது

செவிவிட மதனின் சேரு நூற்றிருபது
விலங்கினத்துக்கு விடுத்தார் புவியினில்
கலங்கிடு இருநூற்றைம்பத்து ஏழு
தோன்றும் பறவையில் தொண்ணூற்றாறு
ஊன்றிடு மேனத்தில் ஒரு பதினெட்டு
சலத்தில் விளைந்த தாவரம் தனக்கு
மூலத்துடன் வினைதான் முப்பத்து நாலு
நாடிய நோய்தான் நாலாயிரத்து
நானூற்று நாற்பத்தெட்டு - (வியாதியும்)
காலனார்க்கு கதித்த பெரும் படை
பாரபரஞ் செய்யும் பார்தனில் மாந்தர்
மேலே கோபியமாகி நிற்பார்கள்
அங்கிட அதனில் அடைந்து வளர்ந்தது
எங்கும் பரவி எழும்பிடும் வினைக்கு
ஆற்றும் சுரதமாய் அரும்பொருள் பதத்தை
போற்றிடப் பிணிபோய் புனிதர் ஆவாரே.

**பொருள்:-**

| | | | |
|---|---|---|---|
| சுரம் | 40 | மூக்கு | 30 |
| சன்னி | 13 | துடி | 20 |
| தோடம் | 7 | வாய் | 70 |
| அதிசாரம் | 6 | பல் | 20 |
| மேகம் | 21 | பல்ஈறு | 16 |
| பாண்டு | 10 | நாக்கு | 49 |
| குன்மம் | 8 | உள்நாக்கு | 6 |
| குட்டம் | 18 | தொண்டை-கழுத்து | 120 |
| வலி | 8 | தோள் | 18 |
| மூலம் | 100 | மார்பு | 21 |
| சூலை | 20 | இருதயம் | 21 |
| வாதம் | 80 | மலம் | 7 |
| பித்தம் | 40 | குடல் | 320 |
| ஜயம் | 100 | சிறுகுடல் | 270 |
| ராசரோகம் | 6 | தொப்புள் | 320 |
| காசம் | 8 | இடை | 16 |

| | | | |
|---|---|---|---|
| மூச்சுநோய் | 9 | நறுதம் பொருள் | 9 |
| தலைநோய் | 210 | குய்யம் | 100 |
| விழிநோய் | 95 | மண்டைவினை | 15 |
| காது | 23 | அந்தரப்பிணி | 6 |
| அற்புதம் | 5 | மயிர் | 30 |
| யந்திரங்கள் | 20 | இரணநோய் | 200 |
| மூலாதாரம் | 24 | பொது | 59 |
| பவனம் | 40 | கடிவிடம் | 160 |
| தொடை | 30 | செடி(மூலிகை) | 120 |
| முழந்தாள் | 20 | விலங்குவிடம் | 257 |
| பாதம் | 63 | பறவை விடம் | 96 |
| மூளைநோய் | 360 | கருவிகள் | 18 |
| எலும்பு | 100 | நீர்த்தாவரம் | 34 |
| நரம்புகள் | 228 | மூலமுடன் | |
| இறைச்சி | 21 | | |
| குருதி | 205 | | |
| தசை | 80 | | 4448 |

**நாதமுனி - தலைநோய் - பழனி -** *(பக்கம் 1 - 4)*

பூவுளோனறியும் போற்றும் புங்கவன் தாளைப்போற்றி
மேவுமாமறைகள் தம்முள் விரித்துரை முன்னோர் சொன்ன
வாவுஎண் சாண்நீள அதில் உறுப்பெண் நான்கு என்றும்
பாவியே அதனில் ரோகம் இன்னமும் பகரக்கேளே. (3)

பகரு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டும்
புகலுறுப்பு எண் நான்கோடும் பொருந்திடும் பெண்ணாய்
சிகையுறு சிரசில் நோய்தான் செப்பில்கேளாய் ஆயிரத்து
எட்டதாகும்
வகையுறுபேர் சாத்தியம் அசாத்தியம் வழுத்தலாமே. (4)

மேவிய உச்சி தன்னில் விளம்பிய வியாதி செப்பில்
காவிய கண்ணினாய்கேள் கருதியே நாற்பத்தாறு
சீவிய அமுர்தமீது சேருநோய் பதினாறுக்கும்
பாவலர் உரைத்தனர் காதில் பற்றிய வியாதிநூறே. (5)

நாவலர் உரைத்தார் அன்றே வேதத்தில் நுவலமாறும்
ஏவலார் குழலினாளே இயம்பிய நாசிதன்னில்
சாலநோய் எண்பத்தாறும் சத்தியம் விழியில் ரோகம்
மேலும் தொண்ணூற்றாறென்றே விரித்துரை
விளம்பினாரே. *(6)*

நாரியே அலகிரண்டில் நாதன் உரைத்தரோகம்
சீரிய முப்பத்தாறும் சிறந்திடும் கவுளிரண்டில்
வார்முலைமானே நாற்பத்தொன்பதாம் வலிசேர்ஈறில்
சேரும் நோய் முப்பத்தேழாம் என்றுதான் செப்பலாமே. *(7)*

ஆகும் எண்நான்கு தந்தமதனில் நோய் நாற்பத்தைந்தாம்
தோகையே சிகுவைதன்னில் ரோகமுஞ் சொல்லும்காலை
நாகமா முனிஉரைத்தார் முப்பத்துநாலா என
பாகமா அறிஉண்றைக்கில் பற்று நோய் இருபதாமே. *(8)*

தானமா இதழ்இரண்டில் சாருநோய் பதினாறாகும்
மானனா இலாடந்தன்னில் வைகுநோய் இருபத்தாறாம்
ஊனமின் கண்ட மீதி உதித்தநோய் நூறாம் என்னில்
பானலங் கண்ணி(கு) ஈசன் பகர்ந்துரை வேதமாமே. *(9)*

மெல்லியாளே கேளாய் விளம்பிய பிடரி தன்னில்
புல்லுநோய் எண்பத்தெட்டு பொருந்திடும் புருவம்
சொல்லிய பதினாறாகும் தோகையே கழுத்தின்மீது
தில்லையுள் ஆடி சொன்னார் தெரிந்துகொள்
முப்பத்தாறே. *(10)*

ஆதிஎம் இறைவன் கூறுமாமறை தன்னில் சொன்ன
நீதிசேர் சிரசில்ரோகம் நிகழ்த்திலா ஆயிரத்தோஎட்டில்
ஆதி எண்ணூற்று நாற்பத்து ஏழுமே உணர்ந்தால் நின்ற
தீதில் நூற்று அறுபத்து ஒன்றும் தேகஎண் சாணதாமே. *(11)*

இவ்வுறுப்புகளைப்பற்றி வரும் நோய்கள் 4448 ஆகும். அவற்றுள் சிரசைப்பற்றி வரும் 1008 நோய்களில் உச்சி முதல் கழுத்துவரை 17 உறுப்புகளில் வரும் நோய்களின் தொகை.

| | | | |
|---|---|---|---|
| உச்சி | 46 | உள்நாக்கு | 20 |
| மூளை | 16 | இதழ் | 16 |
| காது | 100 | நெற்றி | 26 |
| நாசி | 86 | கண்டம் | 100 |
| கண் | 96 | பிடரி | 88 |
| அலகு | 36 | புருவம் | 16 |
| கன்னம் | 49 | கழுத்து | 36 |
| ஈறு | 37 | | |
| பல் | 45 | | |
| நாக்கு | 34 | | 847 |

**கபால ரோகம் - 46**

| | | | |
|---|---|---|---|
| வாதாதி குற்றம் | 10 | கபால வலி | 1 |
| கபால தேரை | 1 | கபால குத்து | 1 |
| கபால கரப்பான் | 6 | கபால வறட்சி | 1 |
| கபால குட்டம் | 5 | கபால சூலை | 3 |
| கபால பிளவை | 10 | கபால தோடம் | 1 |
| கபால திமிர்ப்பு | 2 | | |
| கபால கிருமி | 2 | | |
| கபால கணிப்பு | 3 | | 46 |

**சித்த மருத்துவ நோய் நாடல், நோய் முதல் நாடல் திரட்டு**

டாக்டர் சண்முகவேலு-1967 *(பாகம் 1, பக்கம் 252)*

இந்தக் கணக்கின்படி *34* அதிகம் தெரிவதில் பித்தநோய்*42*, சுரம் *64* என வைத்துக்கொண்டாண்டால் அதில் *27* குறையும் அப்படி இருந்தும் ஏழு எண் அதிகமாக இருக்கிறது. *(4,455)*. இதனைச் சுருக்கி *500* தொகையாகவும், மற்றும் பல கணக்காகவும் பற்பல நூலாசிரியர்கள் நோய்களை வகுத்துள்ளார்கள். இது பற்றியே

*" வாளடா பெரு நூலைச் சுருக்கி*
*வகையாக ஐநூறு தொகையாகச் சொன்னேன்."*

-இரத்தினநாடி

| அக். ரத்தின சுருக்கம் 500 | | தேரையர் வாகடம் | |
|---|---|---|---|
| வாதநோய் | 84 | வாதம் | 82 |
| பித்தநோய் | 48 (42) | பித்தம் | 40 |
| சேத்துமநோய் | 96 | கபம் | 100 |
| தனுர்வாயு | 300 | | |
| காசநோய் | 7 | காசம் | 8 |
| பெருவயிறு | 8 | | |
| சூலைநோய் | 200 | சூலை | 20 |
| பாண்டு | 10 | பாண்டு | 10 |
| கண்நோய் | 96 | கண்நோய் | 96 |
| சிலந்தி | 60 | குன்மம் | 8 |
| குன்மம் | 8 | சன்னி | 13 |
| சன்னி | 76 | | |
| எழுவை, கழலை | 95 | | |
| சுரம் | 85 (64) | சுரம் | 40 |
| மகோதரம் | 7 | | |
| தலைவீக்கம் | 5 | | |
| பிளவை | 10 | | |
| படுவன் | 11 | | |
| கொப்புளம் | 7 | | |
| பீலிநோய் | 8 | | |
| உருவசியம் | 5 | | |
| கரப்பன் | 90 | | |
| கெண்டை | 10 | | |
| குட்டம் | 20 | குட்டம் | 18 |
| அலகு | 3 | | |
| திட்டை (பல்ஈறு) | 5 | | |
| சோபை | 16 | | |
| இசிவு | 6 | | |
| மூர்ச்சை | 1 | | |
| குலைநோய் | 46 | | |
| மூலரோகம் | | | |
| அழல்நோய் | 10 | மூலம் | 100 |

| அக.ரத்தின சுருக்கம் 500 | | தேரையர் வாகடம் | |
|---|---|---|---|
| பீனிசம் | 76 | | |
| கடிவிஷம் | 76 | | |
| நாக்கு, பல் | 76 | நாக்கு | 49 |
| கிராணி | 25 | பல் | 20 |
| மாலைக்கண் | 20 | | |
| அதிசாரம் | 25 | | |
| கட்டி | 12 | | |
| கிருமி | 6 | | |
| கீழ்நோய் | 30 | | |
| முதிர்ந்தநோய் (Cromic Joint disease) | 20 | | |
| சத்தி | 5 | | |
| கல்லடைப்பு | 80 | | |
| வாயுரோகம் | 90 | | |
| திமிர்நோய் | 10 | | |
| விப்புருதி | 18 | | |
| மேகநீர் | 21 | மேகம் | 21 |
| நீர்ரோகம் | 5 | | |
| விஷபாகம் | 16 | | |
| காதுநோய் | 10 | காது | 23 |
| விக்கல் | 10 | | |
| அரோசிகம் | 5 | | |
| மூக்குநோய் | 10 | மூக்கு | 20 |
| கடிதோடம் | 500 | | |
| காயம், குத்துவெட்டு | 700 | | |
| கிரந்தி | 48 | | |
| பறவைவிடம் | 800 | | |
| புறநீர்க்கோவை | 200 | | |
| உதடுநோய் | 100 | | |
| பிள்ளை-?(பிளவை) | 100 | | |
| | 4448 | குறிப்பிட்ட நோய்கள் தவிர ஏனைய மாறுபட்டு உள்ளன. | |

**சித்தமருத்துவம்** *(பக். 12)*

Dr. ச. ஆறுமுகநாதன், சண்முகானந்த புத்தகசாலை, பூங்கா நகர், சென்னை.

| | | | |
|---|---|---|---|
| தலை | 15000 | விரல்கள் | 3000 |
| செவிகள் | 3300 | லிங்கம் | 7000 |
| கண்கள் | 4000 | மூலம் | 5000 |
| மூக்கு | 3349 | சந்துகள் | 2000 |
| தோள், பிடரி | 6000 | பாதம் | 5150 |
| கண்டம் | 5000 | | 72,000 |
| கரங்கள் | 3000 | | |
| முண்டம் | 2170 | | |
| இடை | 8000 | | |

**படுவர்மம் - 12** *(பக். 2)*

சாம்ராஜ் கண்ணவினை உதயமார்த்தாண்டம், குமரிமாவட்டம்

*4448* என்ற தொகையான நரம்புகளின் அசைவுக்குள் வர்மம் ஓடி, மருவி நிற்கின்றது.

**நோய் நாடல் - பாகம் 1 பொது** (General) *(பக். 52)*

| | |
|---|---|
| மூலாதாரத்தில் சுவாசம் | 600 |
| சுவாதிட்டானம் சுவாசம் | 6000 |
| மணிபூரகம் சுவாசம் | 6000 |
| அனாதகம் சுவாசம் | 6000 |
| விசுத்தி சுவாசம் | 1000 |
| ஆக்ஞை சுவாசம் | 1000 |
| நாதாந்தம் சுவாசம் | 1000 |
| | 21,6000 |

**வாதம் - இருப்பிடம் தொழில்** *(பக். 170)*

"நெளிந்திட்டவாதம பானத்தை பற்றி
நிறைந்திடையைச் சேர்த்து நதிக்கு கீழேநின்று
குளிர்ந்திட்ட மூலத்தூடெழுந்து காம
டைப்பற்றி எழுங்கு ஊத்தைப்பாரே."

"குணமான எலும்புமேற்கை நாடி
குழமாகு எழுபத்தி ராயிரத்தைச் சேர்த்து
நிணமான பொருந்திடமும் ரோமக்காலும்
நிறைவாகி மாங்கிஷ எல்லாம் பறந்து
மணமான விந்து விழ நாட்டி
வாதமெங்கும் கலந்து தானே."

**பித்தம்** *(பக். 170)*

" தானான பித்தம் பிங்கலையைப்பற்றிச்
சாய்வான பிராணவாயு தன்னைச்சேர்த்து
ஊனான நீர்ப்பையில் அணுகி உறவு செய்து
துதித் தெழுந்த அக்னியை உறவு செய்து
மானே கேள் இருதயத்தி லிருப்புமாகி
மயலாகி நினைவாகி மயக்க மாகி
கானான சிரந்தனிலே இரக்கமாகிக்
கொண்டு நின்ற பித்த நிலையைக் கூறினாமே."

**கபம்** *(பக். 174)*

கூறினோம் சிலேற்பனமது சமானவாயு
கொழுகியடா சுழிமுனையைப்பற்றி விந்தில்
சீறியே சிரசிலாக்கினையைச் சேர்த்து
சிகுவை அண்ணாக்கு நிண மச்சை ரத்தம்
மீறியே நிறங்கோணம் நரம் பெலும்பில்
மேவியதோர் மூளை பெருங்குடலில் கண்ணில்
தேறியதோர் பொருந்திடங்க ளெல்லாம்
சேர்ந்து சிலேட்டுமம் அது வீற்றிருக்கும் இடம் கண்டாயே.

## சித்தர் அறுவை மருத்துவம்

(By Dr. C. S. உத்தமராயன், H.P.I.M. *பக்.98)*

### தலை, கழுத்தில் வரக்கூடிய நோய்கள் 1008

| | | | |
|---|---|---|---|
| உச்சி | 46 | உள்நாக்கு | 20 |
| மூளை | 16 | இதழ் | 16 |
| காது | 100 | நெற்றி | 26 |
| மூக்கு | 86 | கண்டம் | 100 |
| கண் | 96 | பிடரி | 88 |
| அலகு | 36 | புருவம் | 16 |
| கன்னம் | 49 | கழுத்து | 36 |
| ஈறு | 37 | பொது | |
| பல் | 45 | | 1008 |
| நாக்கு | 34 | | |

### உச்சி 46 நோய்கள்

| | | | |
|---|---|---|---|
| வளி என்பன குற்றத்தால் | 10 | மண்டைவலி | 1 |
| மண்டைத்தேரை | 1 | மண்டைக்குத்து | 1 |
| மண்டைக்கரப்பான் | 6 | வரட்சி | 1 |
| மண்டைக்குட்டம் | 5 | சூலை | 3 |
| மண்டைப் பிளவை | 10 | தோடம் | 1 |
| மண்டை திமிர்ப்பு | 2 | | |
| மண்டைக்கிருமி | 2 | | 46 |
| மண்டைக்கனப்பு | 3 | | |

### சாம்பசிவம் அகராதி - சிரரோகம் *(பக். 3869)*

| | | | |
|---|---|---|---|
| சிரசு | 1008 | மூக்கு | 86 |
| உச்சி | 46 | கண் | 96 |
| மூளை | 16 | கவுள் | 49 |
| காது | 100 | பல் | 45 |
| உண்ணாக்கு | 10x20 | | |
| இதழ் | 16 | புருவம் | 16 |
| லாடம் | 76 | போது | 847 |

வியாதிகள்-5

| | | | |
|---|---|---|---|
| கண்டம் | *100* | தீது | *160* |
| பிடரி | *88* | கழுத்து | *32* |

**சர. வைத்தியம் - சிரரோகம்**

| | | | |
|---|---|---|---|
| காது | *65* | ஈறு | *13* |
| மூக்கு | *18* | நாக்கு | *6* |
| வாய் | *11* | தாடை | *8* |
| கன்னம் | *1* | (கழுத்து) தொண்டை | *15* |

**ஜீவரட்சாமிர்தம் - முகத்தில் வரும் வியாதிகள்**

*(சுப்ரமணிய பண்டிதர் பக். 253)*

| | | | |
|---|---|---|---|
| வாய் | *75* | நாக்கு | *6* |
| உதடு | *11* | தாடை | *8* |
| கன்னம் | *1* | வாய் | *8* |
| பற்கள் | *10* | | |
| தொண்டை | *18* | | *75* |
| ஈறு | *13* | | |

**நாடி** *(பக். 28)*

(Hand book of Indian Medicine by Dr. *ராமமூர்த்தி அய்யர்)*

**மூலாதாரம் முதல் அக்னிவரை**

| | |
|---|---|
| பெரியது | *11000* |
| சிறியது | *18000* |
| கை, கால் பெரியது | *700* |
| சிறியது | *12000* |
| Navel பகுதி பெரியது | *1000* |
| சிறியது | *2000* |
| நவத்துவாரம் பெரியது | *1500* |
| சிறியது | *3500* |
| Extremites பெரியது | *3000* |
| சிறியது | *600* |
| சிறியது என்பு, குடல் | *7000* |
| ஆகமொத்தம் | *72,000* |

*(சாம்பபிள்ளை - பக்கம் 2925)*

| | | | |
|---|---|---|---|
| தலையில் | 7000 | விலா | 3000 |
| இருசெவி | 310 | லிங்கம், யோனி | 7000 |
| இருவிழி | 4000 | அடிவயிறு | |
| மூக்கில் | 3300 | மூலம் | 3600 |
| இருகன்னம் | 5000 | இடைச்சந்து | 2000 |
| தோள் | 1000 | பாதங்கள் | 1000 |
| இருகை | 3000 | சுழுமுனை | |
| தொண்டை, | | அன்னநாடி | |
| தொப்புள் | 916 | இடைகலை | |
| பிடரியின்கீழ் | 8000 | பிங்கலை | |

**சித்தர் அறுசுவை மருத்துவம்** *(பக். 98)*

**பரராச சேகரம் 4448 - விளக்கம்**

பகரு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டும்
புகலுறுப்பொண்ணான் கோடுபொருந்திடும் பொன்னாய் கேள்
சிகையுறு சிரத்தில் ரோகஞ் செப்பிலாயிரத் தெட்டாகும்
வகையுறு பேர் சாத்தியமசாத்திய வழுத்தலாமே.

மேவிய உச்சி தன்னில் விளம்பிய வியாதி செப்பின்
காவியங் கண்ணினாளே கருதிய நாற்பத்தாறு
சீவிய அமிர்த மீது சேரு நோய் பதினாறாகும்
பாவலர் உரைத்தார் காதிற்பற்றிய நூறே.

நூல் வல்லோர் உரைத்தார் ஆயுள் வேதத்தில் நுவலுமாறு
ஏலவார் குழலினாய் கேள் இயம்பிய நாசி தன்னில்
சாலநோய் எண்பத்தாறு சாற்றிய விழியுரோகம்
மேலும் தொண்ணூற்றாறென்ன விரித்துரை விளம்பினாரே

நாரிய அல்லரண்டுனக்கனா ருரைத்த ரோகம்
சீரிய மும்பத்தாறாஞ் சேர்ந்த நாற்கவுளி ரண்டில்

வார்முலை மானே நாற்பத்தொன்பதாம் வரிசேர் ஈறில்
சேருநோய் முப்பத்தேழா மென்று தான் செப்பலாமே.

ஆகுளஎண் நான்கு தந்த மணீதநோய் நாற்பத்தைந்தாம்
தோகையே சிகுவை தன்னில் ரோகமுஞ் சொல்லுங்காலை
நாகமாமுனி உரைத்தான் முப்பத்தி நாலா மென்னப்
பாகமா அறி உண்ணாக்கில் பற்றுநோய் இருபதாமே

பித்தவாதம்
பித்தசிலேத்துமம்
சேடபித்தம்
சேடவாதம்
சேட்டும சலமூலம்
உள்மூலம்
உலர்த்து மூலவாய்வு
அதிசார சுரமூலம்
தோஷ தொந்தமூலம்
வாத ரத்த மூலம்
வாத கெற்ப மூலம்
பித்த வாத தொந்த மூலம்
பித்த சிலேற்பன தொந்தமூலம்
கண்ட மூலம்
ரத்தமூலம்
சேற்பமூலம்

**சூலை -1**

(பொருட்தொகை நிகண்டு-பக்கம் 3185)

வாதசூலை
பித்த சூலை
சிலேட்டும சூலை
வாதபித்தசூலை
சிலேட்டும பித்த சூலை
கண சூலை

**சூலை -7**

(ஜீவ ரட்சாமிர்தம்-பக்கம் 165)

வாதசூலை
பித்தசூலை
சிலேஷ்மசூலை
திரிதோஷ சூலை
ஆம (அசீர்ணம்)
சர்க்கரா
குன்ம

### சூலை - 15

(சித்தமருத்துவம்-பக்கம் 245)

| | |
|---|---|
| மேகசூலை | முறி |
| வாத | பித்த |
| சிலேட்டும | ஆம |
| உக்கார | குன்ம |
| உலர்த்து | நிதம்ப |
| கறை | சுர |
| பக்க | கருப்ப |
| தூர | |

### குடல்விருத்தி -6

(ஜீவ ரட்சா-பக்கம் 152)

| | |
|---|---|
| வாதம் | பித்தம் |
| கபம் | ரத்த |
| மேதோ | மூத்திர |

### குடல்வாதம்-4

| | |
|---|---|
| அட்டிலம் | பிரதி |
| துனி | பிரதிதுனி |

(நோய் நாடல்-பக்கம் 244)

சலகூர்மம் *(4+1=5)* (ஜீவ. ரட்சா-பக்கம் 163)

### குடல் அண்டம்

(சித்தர் அறுவை மருத்துவம்-பக்கம் 76)

| | |
|---|---|
| குடல் அண்ட | குமறல் அண்ட |
| நீர் | சதை |

### புண்-8 *(விரணம்)*

| | |
|---|---|
| உராய்தல் | கிருஷ்ட விரணம் |
| குழிப்புண் | அவகாத்த விரணம் |
| அறுபட்டபுண் | விச்சின்ன |
| என்புவரை ஓடியது | பிரவிளம்பி |
| விழுதல் | நிபாதி |
| அடிபடுதல் | வித்த |
| துண்டித்தல் | பின்ன |
| பிளத்தல் | விதளித |

ஆத்மரட்சாமிர்தம்

## விரணம்-16

(சித்த அறுவை மருத்துவம்-பக்கம் 46)

| | |
|---|---|
| வளி | அழல் |
| ஐய | வளி பித்த |
| வளி ஐய | பித்த ஐய |
| முக்குற்ற | குருதி |
| குருதி தீ | குருதி வளி |
| குருதி ஐய | குருதி வளி பித்த |
| குருதி பித்த ஐய | குருதி வளிஐய |
| குருதி முக்குற்ற | வெளுத்த குருதி |

## சீலைப்புண்

| | |
|---|---|
| வளிசீலை | பித்த |
| ஐய | முக்குற்ற |
| என்பு | |

## புண்-22

| | |
|---|---|
| நெருப்புப்புண் | மேகப்புண் |
| வெள்ளை | ஆறாப்புண் |
| கிரந்தி | ஒட்டு |
| குழி | ஒடுவு |
| இராசா | கரப்பான் |
| பரங்கி | வெட்டு |
| காய | அழி |
| கொறுக்கு | வெடித்த |
| அழற் | இரசவேக்காட்டு |
| புற்று | வயிற்று |
| துளை | அரி |

## விரணம் - 65

வாத பித்த தோஷாதிகளால் ஏற்படுவது

காயங்களால்

| | |
|---|---|
| ஆறக்கூடியது - அதுஷ்ட விரணம் | 49 |
| ஆறாதது - துஷ்ட விரணம் | 15 |
| சுத்த ரத்தத்தினால் பிறப்பது | 7 |

## நாடி விரண பேதம்

நாடிகளில் பிறக்கின்ற கட்டியானது பழுத்து உடைந்து விஷமித்தால் அந்த நரம்பைப்பற்றி மாமிச தாது முதல் அஸ்தி தாது வரைக்கும் சீலையோடும். இதுவே நாடி விரணம்.

| | |
|---|---|
| வாத | பித்த |
| சிலேஷ்ம | திரிதோஷ |
| அஸ்தி | |

## துஷ்ட விரணம் - 15

| | |
|---|---|
| வாத | பித்த |
| சிலேஷ்ம | வாத பித்த |
| வாதகப | சிலேஷ்மபித்த |
| திரிதோஷ | ரத்த |
| ரத்தவாத | ரத்தபித்த |
| ரத்த சிலேஷ்ம | ரத்த வாதபித்த |
| ரத்த வாத சிலேஷ்ம | ரத்த சிலேஷ்ம பித்த |
| ரத்த திரிதோஷ | |

## அதுஷ்ட விரணம் - 49

| | |
|---|---|
| ரச | ரத்த |
| மாமிச | மேதா |
| அஸ்தி | மச்ச |
| சுக்கில | |

*7 தாதுக்கள் மூலம் 7 ஆக 49*

## அற்ப விரணம் - 36

(ஜீவ ரட்சாமிர்தம்-பக்கம் 407)

*ஆட்டு அதிர் கொப்பளம்*
*யவ பிரக்கியா*
*அலசி*
*கச்ச (ஆமை முதுகு)*
*பனசிகா (பலாமுள்)*
*பாஷாண கர்த்தபி (வெண்காக்கட்டான் காய்)*
*முக தூஷிகா (வெங்காயம்)*

*வியாதிகள்-12*

பதும கண்டக (தாமரை முள்)
விவுர்தா
மசூரி
விஸ்போட
வித்தா (அதிக வேதனை தரும்)
கர்த்தபி
கட்சியா (அக்குள்)
கண்டரோக லட்சணம் (கண்டம்-இடம்)
ராஜிகா (கடுகு)
ஜாலகர்த்தபி (வலை)
அக்கினி ரோகணி
பரிகல்லி
பிதாரிகா
சர்க்கரா
சருக்கராற்புத
வன்மீக
கதரம் (கதரம்-ஆணி)
ருத்தகுத (தடுக்கப்பட்ட)
சில்வ
குநக (கு-கெடுதி)
அலச
திலக
மச
ஜதுமணி (அரக்குமணி)
லாஞ்சன (புள்ளி)
வியங்க (மச்சம்)
பிரசுப்தி (திமிர்தவாதம்)
கோட (தமல்)

**அற்ப விரணம் - 13**

(சித்தர் அறுவை - பக்கம் 58)

கொப்புளம்
தவளைச்சொறி
அக்குள் கட்டி
பரு (முகப்)
அக்குள் கொப்பளம்
அக்குள் நிலப்பூசுணக்கட்டி

அக்குள் எரிச்சல் புற்று
ஆணி நகச்சுற்று
சேற்றுப்புண் ஆட்டதர் கொப்புளம்
வரகு கொப்பளம்

**கரப்பான் - 21**

(பரராசசேகரம்)

வாத வாயுவாத
வாதக்கரப்பான் சூலைவாயு விஷபாக வாதக்கரப்பான்
ஓடு வாத கரப்பான் சூலை
கண்ட கரப்பான் சூலை கபால கரப்பான் சூலை
செங்கரப்பான் சூலை மூல கரப்பான் சூலை
அக்குணி கொள்ளி
கற் மொத்தி
காதிற் ஊது
சொறி அரி
வெடி புடை
காணாக்கடி

(பரராசசேகரம்)

வாதக்கரப்பான் வாதபித்தகரப்பான்
வாதபித்த சிலேத்ம பித்த சிலேற்பன
பித்தவாத கரப்பான் வரட்
கரப்பான் வீக்கம் கண்டகிரத்த கரப்பான்

**கரப்பான் - 7**

(யூகி முனிவர்)

வாத திமிர்வாத
சண்ட வரட்சி
கபால பித்த
தோட

**கரப்பான் -23**

(செகராசசேகரம்)

வாதம் வரட்சி
பெருங் திமிர்வாத
கபால விஷபாக

| | |
|---|---|
| புடை | கெண்டை |
| சொறி | தூங்கு |
| வீங்கு | வெடி |
| அரி | காணாக்கடி |
| செங்கரப்பான் | மூல |
| அசுகுணி | கொள்ளித்தட்டி |
| கொப்புளம் | கண்ட |
| கற்கரப்பான் | பொத்தி |
| காதிற் | |

**கரப்பான் - 18**

(பால வாகடம்-பக்கம் 228)

| | |
|---|---|
| வளி | அழல் |
| ஐய | அரி |
| ஊது | சூலை |
| வெடி | மண்டை |
| பொரி | சட்டை |
| ஓடு | கருங் |
| செங் | கொள்ளி |
| தோட | வாலை |
| வாள் | வீங்கு |

(ஜீவ ரட்சா-பக்கம் 292)

| | |
|---|---|
| செங்கிரந்தி ரோகம் | கருங்கிரந்தி ரோகம் |
| பால் கரப்பான் | மலவாதக்கரப்பான் |
| தசனோற்பவ ரோகம்(தசனம்-யல்) | கக்குவான் |

**கபால கரப்பான் - 6**

(சித். அறு. பக்கம் 104)

| | |
|---|---|
| வளி | அழல் |
| ஐய | செங் |
| கருங் | வெண் |

**கடிவிஷம்**

**சிலந்தி-28**

(சாம்பசிவம் அகராதி-பக்கம் 2180

**வாத சிலந்தி - 7**

| | |
|---|---|
| பீத சிலந்தி | சித்திரசிலந்தி |
| குமுத சிலந்தி | சந்தானிக சிலந்தி |
| மூலவிஷ சிலந்தி | மேஜக சிலந்தி |
| இரத்த சிலந்தி | |

**பித்த சிலந்தி - 7**

| | |
|---|---|
| கபிலா சிலந்தி | மூத்திர சிலந்தி |
| அக்னி முக சிலந்தி | சுவேத சிலந்தி |
| பீத சிலந்தி | கறுப்பு சிலந்தி |
| பதும சிலந்தி | |

**கப சிலந்தி - 7**

| | |
|---|---|
| பாண்டு சிலந்தி | திரிமண்டல சிலந்தி |
| இரத்த சிலந்தி | துர்க்கந்த சிலந்தி |
| வண்டு சிலந்தி | சித்திரமண்டலசிலந்தி |
| பிங்க சிலந்தி | |

**சங்கிரண சிலந்தி**

| | |
|---|---|
| காகசிலந்தி | அக்னி பாத |
| லாஜவர்ண | மாலா குண |
| வைதேகி | சலர்ச்சி |
| சால மாலினி | |

**நச்சுப்பாம்பின் வகை - 64**

(சாம்பசிவம்பிள்ளை அகராதி - பக்கம் 2857)

| | | | |
|---|---|---|---|
| ஆடுபாம்பு | 8 | விஷப்பல்பாம்பு | 6 |
| கடிக்கும் விரியன் | 4 | புடையன் | 6 |
| சாரை | 3 | சுருட்டை | 4 |
| கூழை | 2 | கொம்பேறி மூக்கன் | 2 |
| சாரைமூக்கன் | 2 | வழலை | 6 |
| தண்ணீர்ப்பாம்பு | 6 | பச்சை | 2 |
| இருதலை மணியன் | 1 | | |

**சாரை**

(சாம்பசிவம்பிள்ளை அகராதி - பக்கம் 2034)

| | |
|---|---|
| கருஞ்சாரை | மலஞ்சாரை |
| பெருஞ்சாரை | நெடுஞ்சாரை |

| | |
|---|---|
| வெண்சாரை | மஞ்சட் சாரை |
| செஞ்சாரை | |

**நாகம்**

| | |
|---|---|
| கருநாகம் | கரும்படநாகம் |
| பாப்பார நாகம் | செட்டிநாகம் |
| நண்டுதின்னி நாகம் | பூ நாகம் |
| தானடி நாகம் | செந்நாகம் |
| இருதலை நாகம் | முத்தலை நாகம் |
| ஐந்தலை நாகம் | தாழை நாகம் |
| கோதுமை நாகம் | பாறை நாகம் |

**விஷபாக ரோகம் - 8**

(ஜீவ ரட்சா-பக்கம் 270)

| | |
|---|---|
| வாத விஷபாக ரோகம் | பித்த விஷபாகரோகம் |
| சிலேஷ்ம ரோகம் | தொந்த ரோகம் |
| சந்நிபாத ரோகம் | அக்கினிவிஷ ரோகம் |
| எரிச்சல் ரோகம் | கந்த விஷ ரோகம் |

**விஷ பேதம்**

(ஜீவ ரட்சா-பக்கம் 428, 436)

| | |
|---|---|
| இடுமருந்து | திவ்விய சர்ப்பம் |
| கடிவிஷம் | பௌமசாதி சர்ப்பம் |

**திவ்விய சர்ப்பம் - 8**

(ஜீவ ரட்சாமிர்தம் - பக்கம் 436)

| | |
|---|---|
| வாசுகி | அனந்தன் |
| தக்கன் | குளிகன் |
| பதுமன் | மகாபதுமன் |
| சங்கபாலன் | கார்க்கோடகன் |

**பௌம சர்ப்பசாதி 85**

(ஜீவ ரட்சாமிர்தம்-பக்கம் 454)

| | | | |
|---|---|---|---|
| தருவீரகம் | | | |
| மண்டலி | 36 | ராஜமந்தம் | 13 |
| நிர்விஷம் | 4 | வைகரஞ்சம் | 3 |
| | | | 85 |

***காலியாங்குட்டி:*** இது ஒருசாண் நீளத்துடன் தேஜஸ் குறைந்திருக்கும். ஆனால் கடிக்க அறியாது. கடிக்கில் பெருஞ்சிகிச்சை வேண்டும்.

## நரம்புகள்

(சாம்பசிவம் அகராதி-பக்கம் 2875)

| | |
|---|---|
| கேள்வி நரம்பு | பாரிச நரம்பு |
| ரூப நரம்பு | வாசனை நரம்பு |
| பார்வை நரம்பு | உஷ்ண நரம்பு |
| விசர்க்க நரம்பு | ஒற்றுணர்வு |
| அழற்சி | சலன |
| பெரு | சுவாசோதர |
| சுசேரு | துரித |
| எழுச்சி | |
| மூளை நரம்பு | சிர நரம்பு |
| முக நரம்பு | நெற்றி நரம்பு |
| கண்ணிரப்பை | நாசி |
| கன்னப்பொறி | உண்ணாக்கு |
| கன்ன | வெளிக்காது |
| உட்காது | கழுத்து |
| தோள் | கை |
| முதுகு | முதுகுத்தண்டு |
| நுரையீரல் | ஈரல் |
| இருதய | உதர |
| விலா | பிட்ட |
| தண்டு | கடிதட |
| தொடை | உள்ளங்கால் |
| இரத்த | |

## துணைசெய்த நூல்கள்

1. ஜீவரட்சாமிர்தம்-சுப்ரமணிய பண்டிதம், ஆறுமுகம்பிள்ளை (பதிப்பு-2)

2. பரராசசேகரம்

3. செகராசசேகரம்

4. ஆத்மரட்சாமிர்தம்
5. சித்த மருத்துவம்-டாக்டர் குப்புசாமி முதலியார்,HPIM
6. சித்த மருத்துவநோய் நாடல்-பாகம் 2, டாக்டர் சண்முகம்வேல் HPIM
7. சித்தர் அறுவை மருத்துவம்-Dr. C.S. உத்தமராயன்HPIM
8. சரபேந்திர சிரரோகம்-Dr. வெங்கடராஜன்,L.I.M.
9. சாம்பசிவம் பிள்ளை அகராதி
10. History 0f Siddha Medicine - கந்தசாமிப்பிள்ளை
11. Hand Book of Indian Medicine- Dr, T. G, ராமமூர்த்தி அய்யர்
12. கண் மருத்துவம்-டாக்டர் மாதவன் IITS, சென்னை.

## 4448 வியாதிகள் விவரம்

பாரப்பா வாதமது எண்பத்திநாலு
பருக்கவே பித்தமது நாற்பத்தெட்டு
தானப்பா சேத்துமங்கள் தொண்ணூற்றாறு
தனுர்வாயு முன்னூறு சயமோ ஏழு
வேரப்பா பெருவயிறு எட்டதாகும்
வெகுசூலை இருநூறு பாண்டுபத்து
நாரப்பா நேத்திரநோய் தொண்ணூற்றாறு (1)

எட்டப்பா சன்னிவகை எழுபத்தாறு
எழுவையுடன் மொருகழலை தொண்ணூற்றைந்து
மட்டப்பா சுரமதுவே எண்பத்தைந்து
மகோதரமோ ஏழுக்கும் சிரசில்வீக்கம்
முட்டப்பா அஞ்சுக்கும் உடம்பில் வீக்கம்
முதியவே பதினாறு பிளவை பத்து
குட்டப்பா படுவனது பதினொன்றாகும்
குமிழிநோய் ஏழுக்கும் பீலி எட்டே. (2)

பீலியுடன் உருவசியம் அஞ்சதாகும்
பொரிகரப்பான் தொண்ணூறு கெண்டைபத்து
காலிநோய் குட்டமது இருபதாகும்
கதிர்வீச்சு மூன்றாகும் திட்டை அஞ்சு

சோலிநோய் சோபமது பதினாறுக்கும்
சொல்லிசுவு ஆறுக்கும் மூர்ச்சைஏழு
வேலிநோய்ப் பருவத்திலே நாற்பத்தாறு
வெகுமூலமொன்பதாம் கழல்நோய் பத்தே. (3)

பத்தான பீனிசங்கடி விஷ எழுபத்தாறு
பிணிநாக்கு பல்லுநோய் எழுபத்தாறு
பத்தாகுங் கிராணியது இருபத்தைந்து
கண்ணுளே மாலையது இருபதாகும்
கொத்தாகும் அதிசாரம் இருபத்தஞ்சு
கொள்கட்டி பனிரண்டு கிருமி ஆறு
முத்தாகும் முட்டுநோய் முப்பதோடு
முதிர்ந்தநோய் இருபது சந்தி அஞ்சே. (4)

அஞ்சதாகும் கல்லடைப்பு எண்பதாகும்
அதிர்வாயு தொண்ணூறு திமிர்நோய்பத்து
மஞ்சாகும் விப்புருதி பதினெட்டுக்கும்
வளர்மேகம் இருபத்தோர் நீரோ அய்ந்து
பஞ்சாகும் விஷபாகம் பதினாறுக்கும்
பகர்காது நோய்பத்து விக்கல்பத்து
துஞ்சாகும் அரோசியகங்கள் அஞ்சதாகும்
சொல்மூக்கு நோய்பத்து உலகத்தோரே. (5)

குத்தாகும் கடிதோஷம் ஐநூறுக்கும்
குறிகாயங் குத்துவெட்டு எழுநூறுக்கும்
பத்தாகுங் கிரந்தியுமே நாற்பத்தெட்டு
பறக்கின்ற பொறிவிஷமோ எண்ணூறுக்கும்
முத்தாகும் நாள்கிட்டும் பிறநீர்க்கோவை
முதிரவே இருநூறு துடிநோய் நூறு
கொத்தாகும் பிள்ளைநோய் நூறதாகும்
கூறினேன் வியாதிகளின் விபரந்தானே. (6)

(அகத்தியர் இரத்தினச் சுருக்கம்-500)

**வியாதிகள்-13**

## திருமந்திரம்

(வைத்தியப்பகுதி - திருவாடுதுறை ஆதீனம்-பக்கம் 35)

உற்ற விபர முறுதியாமென் நந்தி
பற்றிய மூலம் பகர்த்திடும் நாடிதான்
எற்றியே எண்ணிடில் எழுபத்தீராயிரம்
மற்றதிற் பத்து வளமான நாடியே.

வளமான பத்தில் வழங்குந் தசவாயு
உளமாமிடைபின் சுழிஎன மூன்றுண்டு
களமான சக்கரங் காட்டியதாறுண்டு
தளமான மண்டலந்தான் மூன்றும் பாருமே.

## வியாதிகள் அறியும் முறை

காணவே இரவிலே வாதம் ஓடில்
கனமான சளிஇருமல் இரைப்புண்டாமே
நாணவே செவ்வாயில் வாதம்ஓடில்
நன்மையுள்ள சரமதுதானணுகும் சொன்னோம்
தோணவே மந்தந்தன்னில் வாதம்ஓடில்
துணிந்ததொரு சீதளமும் சன்னியெய்தும்
வேணவே வியாழத்தில் வாதம் ஓடில்
விலாவோடு தேகமெல்லாம் வலியுண்டாமே.

உண்டான திங்களிலே பித்தம் மீறில்
உத்தமனே ஜலதோஷம் உடனே காணும்
பண்டான புந்தியிலே பித்தம் ஓடில்
பாரமுடன் நீரேற்றம் தலைக்குத் துண்டாம்
அண்டான வெள்ளியிலே பித்தம் ஓடில்
அப்பனே கண்நோயும் காதுநோயாம்
தண்டான குவிலே பித்தம் ஓடில்
தண்மையுறுந் தாபசுரம் தலைநோக்காடே.

(அக. பரிபூரணம்-400)

## நாடி

*பித்தத்தின் கீழே புரண்டது ஐயமாம்*
*உற்றுற்றுப் பார்க்கவோர் நரம்பே யோடும்*
*பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தில்*
*மத்தித்த நாளம்போல் வழங்கும் நரம்பிதே.*

*வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றாகில்*
*தழங்கிய பித்தம் தன்னில் அரைவாசி*
*அழங்குங் கபந்தானடங்கிய கால் ஓடில்*
*புழங்கிய சீவர்க்கு பிசகு ஒன்றுமில்லையே.*

*தாது முறையே தனியிடை வாதமாம்*
*போதுறு பிங்கலை புகன்றது பித்தமாம்*
*மாது சுழிமுனை வழங்கிடு மையமாம்*
*ஓதுமுறை பார்த்துணர்ந்தவர் சித்தரே.*

*உணர்ந்த அபானறுமந்த வாதத்தில்*
*புணர்ந்த பிராணன் புகு மந்தப்பித்தத்தில்*
*அணைந்த சமானனடங்குங் கபத்தோடு*
*இணைந்திவை மூன்றுங்கெடுத்த குறியொன்றே.*

| | |
|---|---|
| ஆண்களின் நாடிகள் | 30,000 |
| பெண்களின் நாடிகள் | 30,000 |
| அலி (பேடி) | 2,000 |
| பெண்கள் நாடி | இடதுபுறம் |
| ஆண்கள் நாடி | வலது புறம் |
| (பேடிகள்) அலிகள் | மத்தியில் |
| சிரைகள் (இரத்தக்குழாய்கள்) | 700 |
| பெரியவை | 40 |

(ரத்தம், வாதம், பித்தம், கபம்)

| | |
|---|---|
| 10 | வாதம் அதிகம் |
| 10 | பித்தம் அதிகம் |
| கபம் | 10ல் அதிகம் |
| இரத்தம் | 10ல் அதிகம் |

(பிரித்து அறிதல் கடினம்)

**நிறம்**

| | |
|---|---|
| வாதசிரைகள் | அருண வர்ணம் |
| பித்த சிரைகள் | உஷ்ணம், நீலநிறம் |
| கப சிரைகள் | சீதம், மஞ்சள், வெண்மை |
| இரத்த சிரைகள் | நல்ல சிவப்பு |

**175 சிரைகள்**

| | |
|---|---|
| கை, கால் | 100 சிரைகள் |
| உடல் | 34 சிரைகள் |
| கழுத்துக்குமேல் | 41 சிரைகள் |

**கழுத்துக்குமேல் உள்ள பித்த சிரைகள்**

| | |
|---|---|
| ஏனைய கண்கள் | 10 |
| காது | 2 |
| கண்கள் | 8 |
| காது | 4 |

**தமனிகள் - 200 (வாயு)**

| | |
|---|---|
| மூல தமனிகள் | 24 |
| மேல்பகுதி | 10 |
| கீழ்பகுதி | 10 |
| குறுக்கு | 4 |

தமனிகள் 10ம் மேல்பகுதியான இருதயம் சென்றதும் 30ஆகும். 8 எண் வகை உணர்வுகளை அறிய உதவும். ஏனைய 12, மூச்சுவிடுதல், உள் இழுத்தல், பேசுதல், கத்துதல், தூக்கம் விழித்தல், கொட்டாவி விடுதல், பெண்களுக்கு பால் சுரத்தல், ஆண்களுக்கு விந்து விடுதல் என்ற வேலைகளைச் செய்விக்கின்றன. பாக்கிப் பத்து கிளைகள் தொப்புளுக்கு

மேலே உள்ள இடங்களில் வாதம், பித்தம், கபம் இரத்தம், ரஸம் இவைகளை அவைகளில் வழிகளில் செல்லும்படி செய்கின்றன.

கீழே செல்லும் பத்து தமனிகளும் வயிற்றுக்கும் குடலுக்கும் இடையே ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பிரித்து, முப்பது ஆகின்றன. இவை பித்தாசயத்தை அடையும்போது அங்குள்ள அன்னபான ரஸத்தை நன்றாக பக்குவம் செய்வித்து, ரஸத்தை அதன் இடத்திற்கு அனுப்புகின்றன.

மேலே சொல்லப்பட்ட 30 பிரிவுகளில் இரண்டு பிரிவுகள் குடலில் அன்னபானாதிகளை நகரும்படி செய்கின்றன. இரண்டு பிரிவுகள் அங்கேயிருந்து திரவமான கழிவுப்பொருளை மூத்திராசயத்திற்கு செலுத்துகின்றன. சுக்கிலத்தை இரண்டு பிரிவுகள் வெளிப்படுத்துகின்றன. இந்த நான்கு பிரிவுகளே பெண்கள் உடலில் சூதகத்தை உண்டாக்கி வெளிப்படுத்துகின்றன. இரண்டு பிரிவுகள் மூத்திரத்தை வெளிப்படுத்துகின்றன. இப்படி வேலை செய்யும் 12 பிரிவுகள் போக பாக்கி 18 பிரிவுகளில் எட்டு பிரிவுகள் குறுக்கே செல்லும். 4 மூல தமனிகளிடத்தில் வியர்வையை சேர்ப்பிக்கின்றன. பாக்கி பத்துப்பிரிவுகளும் தொப்புளுக்கு கீழே உள்ள பாகங்களில் வாதம், பித்தம், கபம், ரத்தம், ரசம் இவைகளை அவைகளின் வழிகளில் செலுத்துகின்றன.

குறுக்கே செல்லும் நான்கு மூல தமனிகள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் பிரிந்து உடலில் சேருகின்றன. அவற்றின் நுனிகள் மயிர்க்காம்புகளோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் உடலில் உள்ளும், புறமும் ரசம் பரவுவதற்கு உதவுகின்றன. முக்கியமாக உடலிலிருந்து வியர்வையை வெளிப்படுத்துகின்றன. இவைகளின் உதவியினாலேயே உடலின்மேல் தேய்க்கப்படும் எண்ணெய் முதலிய பசைப்பொருட்கள் உடலில் எடுத்துச் செல்லுகின்றன. உணர்ச்சியை எடுத்துச் செல்லுவனவும் இவைகளே.

மேலும் பதினெண்சித்தர் நாடிக்கோர்வை, அகஸ்தியர் *12,000, 8,000* முதலிய நூல்களிலும், குருநாடி முதலிய நூல்களிலும் விளக்கமாகக் காணலாம்.

## தமனிகள் - 200




## இருப்பிடம்

அறிந்திடும் வாதமடங்கும் மலத்தினில்
பிரிந்திடும் பித்தம் பேராஞ் சலத்தினில்
மறிந்திடு மையம் வாசிக்கும் விந்துவில்
உறைந்திடு மூன்றுக்குற வாந்தலமிதே.

(வாதம்-மலப்பை, பித்தம்-நீர்ப்பை, கபம்-சுக்கிலப்பை)

உறவாங் கறுப்புஞ் சிவப்புறும் நல்வாதம்
குறைவான பச்சைப் பசுமை கொடும்பித்தம்
நிறைவான வெண்மையாய் நின்றதுநல்லையம்
அறைவான வர்ணமதாகுந் தலமிதே.

(வாதம் -கறுப்பு, சிவப்பு, பித்தம்-பச்சை, மஞ்சள், ஐயம்- வெண்மை)

இருந்த இவ்வைந்தாலெடுத்த சடமிது
பிரிந்திடும் மாமிசம் பிருதுவின் மயமாகும்
சொரிந்திடும் மமிர்நீர் சொற்குறி அப்புவாம்
பொருந்திய வன்னி வளமாய் வெதுப்புமே.

(கொழுப்பு-மண்; வாய்நீர்-நீர்; உடல் அனல்-தீ)

வெதுப்பத்துடனே விடுபட்டு நாசியில்
எதுப்புற்று நிற்குமிது காணும் வாயுவாம்
கதிப்பற்றெல்லாங் கவளித்திடமிட்டு
மதிப்பொத்து நிற்கும் வானின் வளப்பமே.

(வாயு-நாசித்துளையில் செல்லுவது ஏனையவைகட்கு இடம் தருவது வானம்.)

வளப்பங்கேள் பூமி வாசிக்கும் நாசியில்
அளப்பமாமப்பு அடங்கிடும் நாவினில்
களப்பமாம் வன்னி கானுங் கண்ணினில்
பளப்பனல் வாயு பரிசிக்கு மெங்குமே.

(பூமி-மூக்கு, நீர்-நா; தீ-கண்; வாயு-உடல் முழுமையும்)

எங்கிய காதிலிருந்து , மா காசம்
பொங்கியதைந்துக்குட் பொல்லாதிம் மூன்றுதான்
தங்கிய வாயு சமர்த்தன் மகா வாதம்
பங்கிய பன்னியாற் பகுத்தது பித்தமே.

(செவி-வானம்; பொல்லா பூதங்கள்-அப்பு; வாயு தேயு; வாயு-மகாவாதம் என்னும் பகுதியாகிய தீயால் பிரிந்தது பித்தம் என்றும் சொல்லப்படும்.)

பகுந்த சலத்தில் பரிசிக்கும் நல் ஐயம்
வகுத்த இம்மூன்றால் வளர்ந்தது நோய் எல்லாம்
அகந்தான றிந்தே அளவிட்ட யோகிகள்
மகிழ்ந்தே இதினின்ற மயக்கம் அறிவரே.

**உரை:** நல்ல நீரில் ஐயம் படர்ந்திருக்கும். வாத பித்த கப முக்குற்றங்களால் எல்லா பிணிகளும் ஏற்படும்.

**வாத குணம்**

புண்ணாய் வலிக்கும் பொருமுங் குடலோடி
தண்ணா மலந்தனைத் தம்பிக்கும் போக்காது
ஒண்ணான வாசன முறவே சுருக்கிடும்
பண்ணார் குளிர்சீதம் பகுத்திடும் வாதமே.

புண்ணாக வலித்தும், வயிற்றுப் பொருமலு ம், குடல் இரைச்சலும் உண்டாக்கி, குளிர்ச்சியினால் மலத்தை கட்டி ஆசனத்தை மலரவிடாமல் உள்ளே சுருங்கச்செய்தும், மிகுதியான குளிரையும், சீதளத்தையும் வாதம் உண்டாக்கும்.

**பித்த குணம்**

பகுத்திடும் பித்தம் பல பல சிந்தையாம்
வகுத்திடும் வாந்தியும் வாய்நீர் மிகஊறும்
மகுத்திடும் மேனியில் மாட்டி எரிப்பேறும்
மிகுத்துத் தவனிக்கும் மிகவிடம் கைக்குமே.

வாந்தி, மிகு உமிழ்நீர் ஊறுதல், எரிச்சல், தாகம் உண்டாகுதல், நாகசத்தல் ஏற்படும்.

**கபகுணம்**

விடங்கிய ஐயம் மேலிரைப் புற்றிடும்
தடங்கி, யிருமிடுந் தனிவிலா விரண்டுநோம்
அடங்கிய சுரங்காயும் அளவற்ற கோழைநீர்
இடங்கி உடல் வற்றி இரத்தமும் கக்குமே

மேல்மூர்ச்சை உண்டாக்கும், இருமலை உண்டாக்கும் லேசான சுரம் ஏற்படும், ரத்தம் கக்கச் செய்யும்.

கக்கிய மூவர்களின் பலன் கேள்
ஒக்கிய வாயுஉடல் கூடில் பலன்
தாக்கிய வாயு சகலத்துக் காதாரம்
சீக்கிய நோயைச் சிறக்க விளைக்குமே.

வாயுவால் உடல் பலம், தொந்த நோய்கள் உண்டாகும்.

விளக்கிய வன்னியும் வாயும் மேற்கொண்டால்
தளக்கிய தாபசுரங் காணம் தோஷமாம்
விளக்கிய அப்புவும் வன்னியும் மேற்கொண்டால்
இளக்கிய சீதள சுரங்காணி தன்பேரே.

தீ, வாயு சேர்ந்தால் தாபசுரம் உண்டாகும். நீர், தீ சேர்ந்தால் சீதள சுரம் ஏற்படும்.

பேரான தோஷம் பிறக்கும் முறைகேளு
வாரான வாதமும் வன்னி கருந்தோஷமாம்
தாறான பித்தம் தழலூடில் வெண்மையாய்
சேறான ஐயஞ் சிவப்பேறும் வாயிலே.

வாயு தீ சேர்ந்தால் கருநிறம், தீ பித்தம் சேர்ந்தால் சிவப்புநிறம், கபம் வெண்மையான நிறமாக நாவில் தோன்றும்.

வாயு வடங்கினால் வளமான தோஷம்போம்
வாயு எழும்பினால் மண்ணும் நீரொன்றாகும்
வாயுவும் நீரால் வழங்கிய வன்னிசால்
வாய்வு மாகாச மண்டல ஓசையே.

வாயு குறைய தோஷம் நீங்கும். வாயு அதிகமாக நீர், மண் ஒன்றாகிய வியர்வை ஏற்படும். வாயு, நீரால் வயிற்றுத் தீ குறையும், வாயு வானத்தில் சேர்ந்தால் ஓசை ஏற்படும்.

தாது முறைகேள் தனித்தகுதி சந்தோ
டோதுறு காமிய உந்தி நடுமார்பு
காது நெடுமூக்கு கண்டம் கரம்புருவம்
போதுறு உச்சிபுகல் பத்தும் பார்த்திடே.

குதிகால் சந்து, ஆண்குறி, தொப்புள், மார்பின் மத்தியில் காதின் அடியில், மூக்கின் அடிப்புறம், கழுத்து, கை, புருவம், உச்சிக்குழி என்ற பத்தும் நாடி பார்க்குமிடங்களாகும்.

## வாயு நோய் சுரம் திரிதோஷம்

வகுத்த முறைப்பாடு மந்தத்தால் வாயுவாம்
மிகுந்த வாயுவால் விளைந்திடும் நோய் எல்லாம்
பகுத்து இவை இரண்டால் பாரச்சுரமுறும்
முகுத்திவை மூன்றால் முத்தோஷம் காணுமே.

பசித்தீ குறைவால் வாயுவும், வாயுவால் எல்லாப் பிணிகளும் ஏற்படும். பசித்தீ குறைவு, வாயு என்பவற்றால் சுரம் ஏற்படும். தீ குறைவு, வாயு, சுரம் என்றவற்றால் மூவகைக் குற்றங்கள் ஏற்படும்.

## மந்தம்

காணுமே மந்தங் கவளிக்கும் அன்னத்தால்
காணுமே மந்தம் கடுமாமிச மீறில்
காணுமே மந்தம் கலந்த மாப்பண்டத்தால்
காணுமே மந்தம் கருமே திப்பாலுக்கு.

உணவால் மந்தம் ஏற்படும். மாமிசம் அதிகம் புசிக்கவும். மாப்பண்டங்கள் புசித்தாலும் எருமைப்பால் அருந்தலாலும் மந்தம் ஏற்படும்.

மேவிய அன்னத்தால் விளங்கிய இச்சடம்
பாவியேகொன்று பழியுறு அன்னத்தால்
ஆவின் மிதந்தப்பிலையுற்று நோயாகும்
காவிலிவை எல்லாம் கண்டு கொளன்னமே.

உணவால் இவ்வுடல் வாழ்கின்றது. அளவு மீறி உணவு உண்டால் பிணிகள் ஏற்படும். உடல் அழியும். கண்டுகொண்டு உணவு உட்கொள்ளவும்.

## நாடி

செப்புநாடி நரம்பினுடத் தொகையைக்கேளு
சேற்பான சென்னி பதினைந்தாயிரம்

ஒப்பதுள்ள செவிஇரண்டும் மூவாயிரத்து முந்நூறு
உரியகண் இரண்டிலும் நாலாயிரமாகும்
தப்பில்லா மூக்கில் மூவாயிரத்துச் சார்வாக
முன்னூத்தி எண்பதாகும்
வொப்பமாய் தோள்பிடரி ஆறாயிரந்தான்
விள்ளுவோம் கருவிதன்னில் முளைத்தவாறே.

(வற்மகண்டி கை ஏடு)

இப்படி எழுப்பதீராயிர நரம்பெல்லை கண்டு
ஒப்பிட நாடி பார்க்கு மடவினை உரைக்கக்கேளாய்
வெப்புறு வாதபித்த சிலேத்தும மிக்கமூன்றும்
தப்பில்லா அறிந்துகொள்ளும் குறிகுணம்

(சாற்றுவோம் திரட்டு நாடி)

**சுரம்**

சொல்லவே சுரத்தினது திறமைகேளாய்
சடத்திலுள்ள பிணிக்கெல்லாம் ராசாவாகும்
எல்லவே நமனுக் கொக்கும்
எழிலோடு பிரதாப கோபமாகும்
தல்லவே தக்கனுடைய வேள்வியைத்தான்
சாம்பசிவன் கோபத்தால் அழித்தபோது
நெல்லவே நெற்றிகண் சுவாலை தன்னில்
நேராகப் புறப்பட்டு நேர்ந்ததாமே.

(யூகி சிந்தாமணி)

**உயர்வை**

| | |
|---|---|
| மலச்சிக்கல் | காய்ச்சல்விட்ட குணம் |
| கடும் வாத ரோகம் | கடும் சன்னி ரோகம் |
| உயிர் நீங்கும்போது | |

## மலசலக்கட்டு

வாயுவினாலே மலசலங் கட்டிடும்
வாயுவினாலே வாங்கிடும் மேல்மூச்சு
வாயுவினாலே மலரும் இரணங்கள்
வாயுவினாலே வரும் ருத்ர ரோகமே.

வளமான பித்தத்தின் மருவிக் கபங்கூடில்
தளமான வாயுவால்தானே வெதுப்பேறி
களமான கன்னத்திற்கட்டியே மூலமாம்
உளமாஞ் சுரத்திலுறுகின்ற வாயுவே.

## மூலம்

காயத்தில் மூலங்கண்ட விதம் கேளு
பாயொத்த தீபனம் பரிந்தே யடக்கினும்
மாயை மயக்க மலத்தை அடக்கினும்
ஓயுள்ள குண்டலிக்குட் புகும் வாயுவே.

## மூலமுளை

வாயு புகுந்து மலத்தோடபானத்தை
தேயுவைக்கூட்டி திரட்டிக் கருக்கிடும்
தோயும் மலம்வரிற் சுருக்கி முன்னேநின்று
ஆயுமூளைபோல அபான இருக்குமே.

## இரத்தமூலம்

இருக்கும் சிலமூல மெழு மண்டலம் போல
மருக்கரணங் கொண்டு வளருஞ்சிலமூலம்
முறுக்கிய வாயுவால் உதிரந்தான் கூட்டித்
தறுக்கி விழக் காட்டுந்தான் ரத்தமூலமே.

**பித்தகுன்மம்**

ஏற்றிய குன்மம் எழுந்தவிதம் கேளு
தோற்றிய பித்தமும் வாயுவுந் தொந்திக்கில்
சேற்றிய அன்னம் செறிக்கில் வலி ஏறும்
மாற்றிய நீருறி ஸந்தியாம் பாருமே.

**வாத குன்மம்**

பாருமே வாதமும் வாயுவும் கூடிடில்
ஓருமே கும்பியில் உழன்று மிகநோகும்
தோறுமே குத்தும் குடலை முறுக்கிடும்
வாறுமே வாதத்தில் வழங்கிய குன்மமே.

**ஐய குன்மம்**

வழங்கிய ஐயமும் வாயுவும் கூடிடில்
தழங்கிய அன்னத்தைச் சந்திக்க ஒட்டாது
புழுங்கிய வன்னம் புளிப்பு கொடுத்தேறி
உழங்கி முறுக்கி உடலை வலிக்குமே.

**மேகசூலை குன்மம்**

வலிக்கிய மேகமும் வாயுவுங் கூடிடில்
பலிக்கிய மலசலம் பதையாமல் கட்டிடும்
இலிக்கிடப் புறமியல்பாம் வலப்புறம்
வலிக்கு முறுக்கும் வரும்சூலை குன்மமே.

**வாத சூலை**

நிலையான வாதத்தில் நின்றில் சூலைதான்
குலையான கைகால் குலைச்செலாம் புண்போல்
கலையால் வலித்துக் கனத்திடும் கீழ்வயிறு
தலையான மேனிதான் இளைத்திடுமே.

கொண்ட மலடிக்குக் கூறுவேன் சன்னிகேள்
மண்டி இருக்கையில் மாத்தின்பாள் மோர்உண்பாள்
தண்டியணைவாள் தனிச் சூதக்காய் தின்பாள்
ஒண்டிய பெண்களுக்கோர் எட்டு சன்னியே.

ஓரெட்டுச்சன்னி உழன்றது பெண்ணுக்கும்
வாரெட்டு ஆணுக்கு மகத்தான சுகசன்னி
நேரிட்டுப் பார்க்கினி கழ்ந்தது வெவ்வேறு
பாரெட்டு மெச்சப் பகுத்த முறைபாரே.

பொடியாநோய் போகப்புகன்றிட்டார் என்நந்து
மடிவான சூதம் மகத்தான தங்கம்
பிடிவான கெந்தி பேரான சத்து
குடியாய் சித்துரித்திட்டு கூட்டியே தின்றிடே.

**மெய்ஞானம் திருமந்திரம்**

க.வே.கந்தசாமி முதலியார், இரண்டாம் பதிப்பு,
பரபிரம்ம அச்சுக்கூடம், சென்னை.

நேரப்பா இதில் சுருக்க மூன்றுநாடி
நிலையான நரம்படா ஒன்றேயாகும்
சேரப்பா வாதபித்தஞ்செய்யும் கூடத்தை திடமாகச்
சொல்லுகிறேன் செப்பக்கேளு
ஆரப்பா பித்தராசன் அரசனாகும்
அப்பனே வாதராசன் மந்திரியாகும்
கூறப்பா வாதத்தின் குணமேதென்றான்
கூர்ந்துபார் மயில்போலக் குதிக்கும்பாரே.

பித்தன் - அரசன்; வாதம் - அமைச்சன்.

**வாதரோக சிகிச்சை**

(வாசுதேவசாஸ்திரி, சரசுவதி மகால் நூலகம், தஞ்சை.)

| ***வாதத்தின் குணங்கள்*** | ***பித்தம்*** *(தன்மை)* |
|---|---|
| வறட்சி | நைப்பு |
| இலேசு | மெலிவு |
| குளிர்ச்சி | சூடு |

சுறுசுறுப்பு — வேகம்
நுட்பம் — நாற்றம்
நிலையில்லாமல் அலைவது — அசையும் தன்மை
நெகிழ்ந்தோடுதல்

**கபம்** *(தன்மை)*

நைப்பு — அசையாமை
கனம் — வழவழப்பு
குளிர்ச்சி — பசையுள்ள தன்மை

**வாதத்தின் இடங்கள்**

குடல் — இடுப்பு
மூத்திரப்பை — துடைகள்
பாதங்கள் — எலும்புகள்
பொதுவாக தொப்புளுக்கு கீலே உள்ள பகுதிகள்

**பித்தத்தின் இடங்கள்**

வயிறு — ரஸதாது
ரத்தம் — ஊன் தண்ணீர்
வியர்வை — கண்கள்
பொதுவாக தொப்புளுகு மேல் இருதயத்துக்கு கீழ் உள்ள பகுதிகள்.

**கபத்தின் இடங்கள்**

மார்பு — கழுத்து
தலை — கணுக்கள்
கொழுப்பு — ஆமாசயம்
பொதுவாக இருதயத்துக்கு மேல் உள்ள இடங்கள்

குழந்தை — கபம்மிகுதி
இளம் வயது — பித்தம் மிகுதி
கிழ வயது — வாதம் மிகுதி

காலை — கபம்
மதியம் — பித்தம்
மாலை — கபம்
இரவு — கபம்

| | |
|---|---|
| ***வாதம் அதிகரித்தல்*** | ***சமனம்*** |
| கார்ப்பு | இனிப்பு |
| கைப்பு | புளிப்பு |
| துவர்ப்பு | உப்பு |
| ***பித்தம் அதிகரித்தல்*** | ***சமனம்*** |
| கார்ப்பு | இனிப்பு |
| புளிப்பு | கைப்பு |
| உப்பு | துவர்ப்பு |
| ***கபம் அதிகரித்தல்*** | ***சமனம்*** |
| இனிப்பு | கார்ப்பு |
| புளிப்பு | கைப்பு |
| உப்பு | துவர்ப்பு |

**வாத சேட்டைகள்**

1) இடத்தைவிட்டு நழுவுதல்
2) வெகுதூரம் நகரல்
3) பரவுதல்
4) அடைப்பு
5) பிளப்பது போன்ற வலி
6) மலம் என்பவற்றை உருண்டையாகச் செய்தல்
7) தாகம்
8) நடுக்கம்
9) உடம்புவலி
10) துடித்தல்
11) குத்துவலி
12) நகருதல், உதறுதல் என்பன
13) சுரசுரப்பு உண்டாக்கல்
14) கடினம் உண்டாக்கல்
15) வெலவெலக்கச் செய்தல்
16) துளை உண்டாக்கல்
17) செம்மை கலந்த கறுமை உண்டாக்கல்
18) வாயில் துவர்ப்பும் அருசியும் உண்டு பண்ணல்
19) வேலையில் மூளை செல்லாமல் தடுத்தல்
20) குறுக்கல்
21) முடக்கல் என்பன

**பழக்கத்தில் உள்ள சிறப்பான வாதத்தின் பெயர்கள்**

| | |
|---|---|
| தந்திவாதம் | காக்கை வாதம் |
| தனுர்வாதம் | திமிர்வாதம் |
| ரசவாதம் | சந்தியாவாதம் |
| சுரோணித வாதம் | ஆமில வாதம் |
| கிக்கிச வாதம் | பாரிச சூலை |
| மது சூலை | ஸ்நான சூலை |
| கம்பசூலை | தூமசூலை |
| விஷாகிசூலை | குடல்சூலை |
| இருகால்சூலை | மூத்திரசூலை |
| அங்குலிசூலை | பிரமண சூலை |
| முணங்கு சூலை | சன்னிவாதம் |
| சருளவாதம் | விருச்சிகவாதம் |
| நாடிவாதம் | கன்ன வாதம் |
| சிங்காங்க | நாநாப் பிராண |
| முகப்பிராண | நயன பிராண |
| உதிரபிராண | தூமிர பிராண |
| கபால பிராண | கட்டுல் பிராண |
| சாகர பிராண | ஈரல் பிராண |
| சூலை பிராண | சுரோணித பிராண |
| பெருங்கால் | குதிக்கால் |

உட்கொண்ட அன்னபானாதிகள் வயிற்றில் சென்றவுடன் இனிப்பான பகுதிகள், இனிப்பாக மாறும். இது மதுரபாகம். மதுரபாகத்தின்மேல் உள்ள நுரையாக உள்ளது கபம் ஆகும்.

புளிப்பான பகுதிகள் செரிமானத்தின் இரண்டாம் பகுதி. இது அமல பாகம். இவைகள், குடல்வழிச் செல்லும்போது அமலபாகத்தின் மேல் வரும் பகுதி பித்தம் ஆகும். கார்ப்பான, பகுதிகள் மூன்றாம்பகுதி. இது கடுபாகம். சக்கையானது மலக்குடல் வழி வெளியாகும். வாயும் இதனுடன் சேர்ந்து வெளியாகும்.

உணவானது ரசம் ஆக மாறி இரத்தமாக உருவாகும். மதுரபாகத்தின்போதும் ரத்தமாக மாறும்போதும் கபம் உண்டாகும். ரத்தம் மாமிசமாக மாறும். பித்தம் மலமாக வெளியாகும். மாமிசம் கொழுப்பாக மாறும். அப்போது காது முதலிய துளைகள் வழி அழுக்கானது வெளியாகும். கொழுப்பு என்பாக மாறும்போது மலமாக வியர்வை மாறும். என்பு, மஜ்ஜையாக மாறும்போது நகமும், மயிரும் மலமாக உண்டாகும். மஜ்ஜையானது விந்துவாக ஆகும்போது உடலில் மலமாக, எண்ணெய்ப்பசை ஏற்படும்.

### ஏழு தாதுக்கள் செய்யும் வேலைகள்

ரசம் - ஆனந்தத்தை அளித்தல்
மஜ்ஜை - என்புத்துளையை அடைதல்
ரத்தம் - வளர்த்தல்
மாமிசம் - பருமன்
மேதஸ் - நைப்பு
சுக்கிலம் - கரு உண்டாதல்
என்பு - நிலை நிறுத்துதல்

### வாதம் கூடிக் குறையும் காலங்கள்

வாத வர்த்தனை கால மெதோ என்னில்
மருகின்ற ஆனி கற்கடகமாகும்
ஆத அற்பசியோடு கார்த்திகை தன்னில்
அடருமே மற்ற மாதங்கள் தன்னில்
போதவே சமிக்கின்ற காலமாகும்
பொருந்தியே இவர் தொழில்தான் கண்திறத்தல்
காதவே கண்மூடல் கை காலசைத்தால்
கடிந்தோட்ட முடக்கலோடு நிட்டல் என்னே.

*(வைத்தியசிந்தாமணி-யூகிமுனி 246)*

## குணவாகடம்

(சிதம்பரநாத முதலியார், வித்யாரத்னம் அச்சுக்கூடம், சென்னை.)

### அகஸ்தியர்-நோயின் சாரம் - மந்த சுரகுணம்

*வாதந்தான் தனித்து நின்று வந்திடும் பந்துபோல*
*தீதற எழும்பி நின்றால் சிக்கியே மந்தம் பற்றும்*
*ஏதுவார் சுரங்கண்ட இடைவிடா நிற்குமல்லால்*
*தாதுவும் குறைந்து நின்று தன்னையும் மறக்கச் செய்யும். (6)*

*உற்றிடும் வாதநாடி ஒரு விரலுக்குள்ளே நின்று*
*பற்றியே சிலுப்பி நின்று பையவே நடக்குமாயின்*
*மத்திய சுரமே ஆகும் மலைச்சுரம் அது தானாயின்*
*அத்தியே மற்றியோடி அடங்கிடா எழும்பி நிற்கும் (7)*
*(சகல சுரங்களும், மலைச்சுரங்கள் அறிதல்)*

### வாதக் கதிப்பால் வரும் நோய்கள்

*வாதமே கதித்த போது வாயுவு எழுப்புங் கண்டூர்*
*வாதமே கதித்த போது வந்திடும் சன்னி தோஷம்*
*வாதமே கதித்த போது வந்திடும் வியாதி மேலும்*
*வாதமே கதித்த போது வல்லுடல் மெலித்துக்கொல்லும். (8)*

*பித்தமே தனித்தால் சூடு பெலத்துடன் உலாச்செய்யும்*
*பித்தமே மிகுந்தால் ஈளை இருமலும் பெலத்துநிற்கும்*
*பித்தமே மிகுந்து தானாற் பெலன் குறைந்துடம்பு படுத்தும்*
*பித்தமே திரட்டி நூலில் பேசினோர் பெரியோர் தாமே. (35)*
*(பித்தநோய்கள் வருதல் அறிதல்)*

### பிணிகள் வராமையும், வருகையும் அறிதல்

*வாதபித்த ஐய மூன்றும் வன் பலத்துடனே தத்தம்*
*பேதம் ஒன்றில்லா வண்ணம் பேசிய தானந்தன்னில்*
*நீதியாய் நிலைத்து நின்றால் நெடும்பிணி சிக்கவில்லை*
*தாதுவும் ஒன்றொடொன்று தாவிடில் பிணிகள் தாமே. (49)*

**அக. மகா முனிவரின் குருநாடி - 235**

(அருணாசல முதலியார், மனோன்மணி அச்சுக்கூடம்)

**4448 வியாதிகள்**

நன்றென வியாதிதானு நவிலுகிறேன் ஆகமத்தில்
குன்றென வளர்ந்த நோய்கள் சகலமும் தொகையாய்ச்
சொல்வேன்
அன்றென எழுந்தநாடி எழுபத்தீராயிரந்தான்
கன்றென நாடி பத்து கருத்துறு எழுதாது

தாதுவே பஞ்ச பூதமதிலுறு நாடி மூன்று
கோதறு குரு வாநாடி குறிப்புடன் மேவி நின்று
தாதுறு சத்ததாது தசை நரம்பெலும்பு தானும்
வேதுறு ரோமமச்சை சுக்கில நெய்யாம் பித்தம்.

பித்த நாற்பத்து நான்கு பெருவயிறு எட்டதாகும்
உள்ளதோர் பீலிஎட்டு மோசியும் மூன்றதாகும்
மெத்தவே சிலேற்பனந்தான் மிகுந்திடும் தொண்ணூற்றாறு
மற்றமே வாதரோகம் வகையு எண்பத்து நாலே.

சன்னியும் பதினெட்டாகும்தான் வலி நேத்திரந்தான்
உன்னிய தொண்ணூற்றாறு முழுவையு மூன்றதாகும்
மின்னிய பக்க சூலை மேவிடு ஏழதாகும்
சென்னியில் வீக்கந்தானும் சேர்ந்திடு ஐந்துதானே.

பிளவையில் சிலந்திதானும் பெருத்துடன் ஐம்பதாகும்
அளவிலா சுரமே கேளு அறுபத்து நாலதாகும்
களமிகப்படுத்தும் பாண்டு தானும் அஞ்சதாகும்
இளகிய குன்மம் எட்டு ஏந்திய விக்கலாமே.

இந்திர கோப தோஷ இருபது எழுபத்தாறும்
அந்திர வாயு சங்கை ஆயிரத்தெட்டே ஆகும்
தந்திர பார்வை தோஷம் தானுமே நூறதாகும்
மந்திரக்குமிழி எட்டும் மகோதரம் எட்டாமே.

படுவன முப்பத்திரண்டு பருவொரு நாற்பத்தொன்று
மூடுகிடும் விஷபமாறு முற்று மேகவுசி மூன்றுந்
திடுகிடும் பீலி மூன்று சிரசினில் சிலந்தி சொல்லில்
கடுகிடுமைப் பத்தாறு கரப்பான் எண்பத்தைந்தே.

திருக்குநோய் எண்பதாகுந்திரளும் விப்புருதி பத்தாம்
மருக்கவே கிராணி தோஷமற்றுமே இருபத்தொன்று
மிருக்கிடும் பிளவை தானுமே ஏழுனு இவைசொல்லில்
சுருக்கிந்த தோஷம் தானும் காணுமே நாற்பத்தாறே.

குட்டமும் பதினெட்டாகுங் குறைநோவு எட்டதாகும்
திட்டமாம் சூலை எட்டுச் சித்திய மாறதாகும்
தட்டு நீரிழிவு சொன்னோம் தானுமே இருபத்தொன்றும்
சிட்டமாம் விஷபமைந்துஞ் சேரும் காமாலை ஆறே.

மேகமும் இருபத்தொன்று மிகுயோனி சூலை எட்டு
தாகமு மாறதாகும் தனிரத்த பித்த மூன்றும்
சோகை மூன்றதாகும் சூசிகா வாய்வு பத்தும்
ஆகத்தில் விக்க மென்பான் அரையாப்பு மூன்றதாமே.

ஆனதோர் நரம்பு ரோகம் ஆயிகத்தொரு நூறென்றும்
ஈனமாம் குந்திரத் தானும் இருபது பன்னிரண்டு
தானமாம் தண்டில் ரோகம் தான்ஒரு மூன்றதாமே
கானமாம் குழலினாலேகச ரோக மூன்ற தாமே.

எலும்பினில் பத்துரோகம் ஈன்என்பது என்று சொல்லுங்
கலங்குமே பெருவயிற்றில் கலந்திடு நூற்றெட்டு என்னு
குலுங்குமே தலைநோக்காடு குறித்திடு ஐம்பத்தொன்பான்
நலங்கு சேர்தலை மூளையின் நாற்பது ரோகந்தானே.

முற்றுமே உதரரோக நூற்றெட்டு நாற்பத்தென்னும்
பற்றிய நாக்கில் ரோகம் பன்னிரண்டாகு மென்ன
சுற்றிய கண்டமாலை சொல்லிய எட்டதாகும்
மற்றுமா நேத்திரரோக ஐந்துடனாலதாமே.

காதினில் வியாதி தானுங் கருகிடு இருபத்தி எட்டும்
மார்பினில் நோய் ஐந்தாகும் மற்றொரு நாலதாகும்
மாதியா நெற்றிரோகம் செனுமோர் இரண்டு
சோதியாய் உதிரமண்டலி சொற்படி இரண்டதாமே.

புண்ணிற் சன்னி ஐந்து பொருந்திய வாய் நிரைந்து
நண்ணிய நாசிரோக நால் மூன்று என்னத்
திண்ணிய வாதம் எட்டு சிரங்கண நாலதாகும்
பண்ணிய ரோகம் சூழ்ந்து பாரிக்கும் வாதமாமே.

காயாச்சுவாச மைந்து சதித்திடும் பவுத்திரம் எட்டு
மாயமாய வெள்ளோக்காளம் வந்திடும் ரோகம் ஐந்து
சாயுங் குட்டச் சிலந்திதான் ஒரு மூன்றதாகும்
மாயமா முனிவன் சொன்ன மூலமும் ஆறதாமே.

தேகத்தில் கழிச்சலைந்து திகழ் சூலை குத்து நாவும்
வகுத்தினில் புழுவே கேளு வளர்ந்திடும் இருபதென்ன
மெகத்திடு மூச்சு வாதமெய்யதே நாலாமென்ன
பகைத்திடும் பதாரிரண்டு பாய்ந்த பீனசமுநாலே.

மூத்திரக் கழிச்சல் நாலு முந்து நீரடைப்பு நாலு
மாத்திரைப் பாதசக்கரம் வந்திடு நாலாமென்ன
சாத்திரப்படியே சொன்னோம் தந்தத்திவ வாயுஎட்டு
சூத்திரப்படியே ஆண்ட வாயுவு ஏழதாமே.

மாந்தமும் எட்டதாகும் மயக்கிடு மூர்ச்சை ஆறு
சேர்த்திடும் பிள்ளை தோஷம் செப்பிடில் நூற்றெட்டதாகும்
வார்த்திடு மடந்தாய் வாத சுரோணித ஏழதாகும்
தாழ்ந்திடுங் கன்ன ரோகந்தான் ஒரு ஐந்தே ஆகும்.

அட்டையின் கடியின் மூன்றும் அரணையின் கடிகள் மூன்று
நட்டுவாக்காலி இரண்டு நல்லதோர் விஷமு நாலு
தட்டிடும் செந்தாம் தானுந்தாக்கிடு விஷ ஐந்து
இஷ்ட மாஎலி விஷங்கள் ஒன்பது என்று சொல்லும்.

**வேறு**

சேளக்கடி விஷ மூன்று சேர்த்தமானாய் விஷமஞ்சு
நாளாய் நரி கடி ஒன்றாகு நலமாங் கருவாய் விஷமூன்று
தேளாய் என்றும் விஷஜந்து கெருவாம் பூரக்கடி மூன்று
தேளாஞ் சுந்தரி விஷமூன்று திரித்தபலி விஷ ஐந்தாடே.

**வேறு**

எரிபுலி கடியே எட்டு ஏனத்தின் விஷமிரண்டு
கரியநீர் கரடிதானும் கடித்திடும் விஷமிரண்டு
பரிவுள்ள குரங்கு மந்தி பலகடி விஷமுமூன்று
விரிவுள சிறுபாம்பு தானும் மேவிய விஷமூன்றே.

பூனையின் கடிகள் இரண்டு பேய்நரி விஷமிரண்டு
சேனையிலும் யுத்தம் செய்து தெரித்திடும் குண்டுகாயம்
மானையே வென்ற கண்ணாய் வல்லயக் குத்துகாயம்
மீனையே தேளி ஒன்று விலாங்கது ஒன்றதாமே.

பீரங்கிக் குண்டுக்காயம் பெரியதோர் குத்துக்காயம்
கூர் அம்பட்ட காயம் குலைபடு வெட்டுக்காயம்
பாரங்கந்தன்னிற் சென்று புரை பெறக் குடலைப் பீறி
சூரங்கள் பண்ணிப் பீறிச் சூரியால் வகுத்தகாயம்

இப்படி முதல் வலிப்பு எழில் மூன்றும் வகையாய்ச்
சொன்னேன்
சொற்படி அறிந்து செய்யில் அதுவகை நாலாயிரந்தான்
ஒப்படி நாடிதானும் குணங்களும் வருகும் வாதுஞ்
செப்படி ரண்டுங் கொள்ளத் திருவுளமருளிச் செய்தார்.

நாடிதான் இயம்பக்கேளூர் நயமுடன் அறிந்து நீயும்
வாடிய மண்ணுக்குள்ளோர்க்கு வரும் வினை வியாதி ஆதி
காடிய வியாதிதானும் கதித்திடுங் கடினஞ் செய்யும்
தூடிய உலகோர் செய்கை தொகுத்து நானுரைக்கிறேனே.

உற்றதோர் உடலிற் கூறு உறுப்புடன் விரவி நின்று
முற்றுமே நோய்கள் எல்லாம் முதிர்ப்பெழத் தோன்றும் போது
பற்றுமே வாதபித்த சிலேற்பனந்தன்னி லொன்றை
பற்றியே தோன்றுமென்று பகர்ந்தனர் முனிவர்தானே.

| அக. ரத்தின சுருக்கம் 500 | | அக. குருநாடி 235 | |
|---|---|---|---|
| பித்தம் | 48 | பித்தம் | 44 |
| கபம் | 96 | பெருவயிறு | 8 |
| வாதம் | 84 | பீலி | 8 |
| சன்னி | 8 | மோசி | 3 |
| கண் | 96 | கபம் | 96 |
| சுரம் | 85 | வாதம் | 84 |
| பாண்டு | 10 | சன்னி | 18 |
| குன்மம் | 8 | கண் | 96 |
| விக்கல் | 10 | பக்கசூலை | 7 |
| குமிழி | 7 | சென்னிவீக்கம் | 5 |
| மகோதரம் | 7 | பிளவை, சிலந்தி | 50 |
| படுவன் | 11 | சுரம் | 64 |
| பீலிகம் | 8 | பாண்டு | 5 |
| கரப்பான் | 96 | குன்மம் | 8 |
| விப்புருதி | 18 | விக்கல் | 20 |
| கிராணி | 25 | தோஷம் | 76 |
| பிளவை | 10 | அந்திரவாயு | 1008 |
| குட்டம் | 20 | பார்வைதோஷம் | 100 |
| சூலை | 200 | குமுழி | 8 |
| வீக்கம் | 16 | மகோதரம் | 8 |
| சயம் | 7 | படுவன் | 32 |
| நா | 76 | கவுசி | 3 |
| காது | 10 | பீலி | 10 |
| மூக்கு | 10 | சிரசின் சிலந்தி | 10 |
| மூலம் | 9 | கரப்பான் | 85 |
| பீனசம் | 76 | திருக்குநோய் | 80 |

| | | | |
|---|---|---|---|
| பல் | 76 | விப்புருதி | 10 |
| மூர்ச்சை | 7 | கிராணி | 27 |
| பிள்ளைப்பிணி | 100 | பிளவை | 8 |
| | | தோஷம் | 46 |
| | | குட்டம் | 18 |
| | | குறைநோய் | 8 |

அக. குருநாடி - 235

| | | | |
|---|---|---|---|
| சூலை | 8 | சன்னி | 5 |
| நீரிழிவு | 21 | நாசிரோகம் | 7 |
| யோனிச்சூலை | 8 | வாதம் | 8 |
| ரத்தபித்தம் | 3 | சுவாசம் | 5 |
| சோகை | 3 | பவுத்திரம் | 8 |
| சூசிகாவாயு | 10 | ஒக்காளம் | 5 |
| மார்புவீக்கம் | 3 | குட்டச்சிலந்தி | 3 |
| அரையாப்பு | 3 | மூலம் | 6 |
| நரம்புரோகம் | 1100 | கழிச்சல் | 5 |
| குந்திரம் | 32 | பீனசம் | 4 |
| முள்ளந்தண்டுநோய் | 3 | மூத்திரக்கழிச்சல் | 4 |
| கசரோகம் | 3 | நீரடைப்பு | 4 |
| என்பு | 10 | தந்தவாயு | 8 |
| பெருவயிறு | 108 | ஆண்டவாயு | 7 |
| தலைவலி | 59 | மாந்தம் | 8 |
| நா | 12 | மூர்ச்சை | 6 |
| உதரரோகம் | 108 | பிள்ளைதோஷம் | 108 |
| கண்டமாலை | 8 | வாதசுரோணிதம் | 8 |
| நேத்திரரோகம் | 5 | கன்னரோகம் | 5 |
| காது | 28 | அட்டைக்கடி | 3 |
| மார்பு | 5+4=9 | அரணைக்கடி | 3 |
| நெற்றிரோகம் | 2 | நட்வாக்காலி | 2 |
| உதரமண்டலி | 2 | எலிவிஷம் | 9 |

வியாதிகள்-16

## இல்லாதது

| | | | |
|---|---|---|---|
| தனுர்வாயு(இல்லை) | 300 | கழல்நோய் | 10 |
| எழுச்சி,கழலை | 95 | விஷக்கடி | 76 |
| சிரசுவீக்கம் | 5 | கட்டிகள் | 12 |
| இசிவு | 6 | கிராணி | 25 |

## சில்லரைக்கோவை

ஆதியிலே பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும்
மகத்தான தர்க்கம் வந்தவகை என்றால்
பாதிரி மலர்தரித்த அயன் பெரியோன் என்றான்
பதரியே மால் பெரியோன் என்றான் அப்பால்
வீதிதனில் வந்திருவர் யுத்தம் செய்தார்
வேகமொடு பாணங்கள் சூலஞ்சக்கரம்
நீதியுள்ள கரத்தாலும் முட்டியாலும்
நெடியவனும் அயனும் போர் கொண்டிட்டாரே
கொண்டபின்பு இவர்களையே தணிக்க ஈசன்
கொடுமையுள்ள வியாதிகளை உண்டுபண்ணி
சண்டமாருதமாக இருவருமே தாக்க
சாரங்கனு அயனுமே சயிக்காமற்றான்
அண்டர் பிரானடி பணிந்து போற்றியே ஏத்தி
அவர்களுமே தங்கள் பதிக்கு ஏகினார்கள்
தெண்டனிட்டு வியாதிகளுமே எமக்கேதென்ன
தெரிவிப்ப ஈசனுமே தண்டிக்கத்தானே
தண்டிப் பதியாதென்னில் தேவவாக்காக தரிவித்தோமே.

## வயித்தியம் முன் 80 - 72000 நாடிகள்

நாளிலே சிரசில் வரும் நரம்பதனைக்கேளு
நாற்பத்தீ ராயிரந்தான் கழுத்துக்கரைமேலே
தாளிலே தோள் முதுகு நெஞ்சு கைகள் வயிறுந்
தனி யிடுப்புகீழ் வயிறு வீரன் கொசங்குத
வருமிரங்கி

நரம்பை ஒட்டிப்பின்னி கேள் கரைமூலம்
வரை யிரூப தினரம்பு தூவிலே
துடை முட்டுக் கரண்டை பாதவிரன்
மேற்றொட்டு நரம்பு மூவாயிர மாச்சே
ஆச்சு நரம்பெழுபத்தீராயிரமா நாடியங்
அங்கங்கே முடிச்சு பின்னுற சுருக்கும் நீட்டும்
வாச்சுவலி இறுக்கிக்கட்டி வலித்து விரித்தோட
வலிய சுமை பிடிக்க வளர்க்க நரம்பின்
நாச்சு நாலில் நாக்குருளும் நாபிரல்கள் மடிப்பும்
நடந்தோடி தொடை மடக்கு இடுப்பு கழுத்துத் தசையும்
பேச்சும் செவிசிரசு முதற்பிறங்கால் பாதம் வரைக்கும்
பெரிதான நரம்பின் தொழில் பேசப் பெரிதாமே.

**சித்த மருத்துவம்** - *(பக்கம் 4)*

சுரமொடு லட்ச பேதம்
தொகுத்திடில் அவர்களாலும்
கருதிட முடியாதென்று
கண்டதை சுரக்கச்செய்து
முருகிய வாதபித்த
கபமிவை மூன்றில்தோன்றி
விரியும் அச்சுரத்தை யானும்
விரைப்புடன் உரைத்த தாகும்.

**பொருட்தொகை நிகண்டு**

(சுப்பிரமணிய கவிராயர், சங்கம், மதுரை)

குற்றம் ஐந்தவை கொட்டாவி நெட்டை
குறுகுறுப்பு மூச்சிடல் அலமரலொடு
நட்டு விழுதலென்ன நவிலுவர்.

என

அறுவகை சூலை அவை பித்தசூலை
வாத சூலை சிலேட்டும சூலை
வாத பித்த சூலை ஐய கண சூலை
என மருத்துவ நூல் இயல்பு என்ட

எச்சம் எட்டாம் அவை குறள் கூன் ஊமை
செவிடு குருடு முடமறுப்பு மயக்க
உறுப்பில் பிண்ட இவையே எண்வகை
உடற் குறை என்ன ஓதவும் படுமே.

வாதமுடனே வலிய கல்லடைப்பு
குட்டமேக மகோதரம் பகந்திரம்
மூலரோகம் கிராணி ரோக
எனுமிவை அட்ட மகாரோகங்கள்.

**போகர் 700** *(வைத்தியம்)*

53 பசும் பொன்னாம் திருகின்ற நோயைக்கேளு
பகரரிய மேகவகை இருபதும் போம்
பசும்பொன்னாம் சிலேத்துமங்கள்
தொண்ணூற்றாறும்

54 குட்டமொடு வாயு என்ற இருபத்து நாலும் (ஆறும்)
குடிகெடுத்த பித்தம் நாற்பதுவும் போகும்
மட்டமாம் வாதம் எண்பதுவும் போகும்.
... ... ... ... பதினென் சூலை
சட்டமாம் லிங்கப்புற்று யோனிப்புற்று.

56 எய்க்கவே நரம்பு வாய் சிலந்தியோடும்
எச்சிலந்தி உள்ளவகை எட்டெட்டும் நான்கே.

57 நான்கோடு பவுத்திரமும் நேத்ரரோகம்
தந்தாச் சிலேத்தும நோய் தொண்ணூற்றாலும்

58 தான் என்ற ஸ்திரி கர்ப்ப நோய்கள் ஏழும்
பாவென்ற சில்விஷங்கள் அறுபான் நான்கும்

85 என்னவே குன்மம் எட்டு கிராணி ஆறு.

94 பொல்லாத சூலை பதினெட்டும் போகும்
வாச்சென்ற வாதம் எண்பதுவும் போகும்
வாகான கிரந்தி பதினெட்டுக் குட்டம்
காச்சென்ற வலி ஐந்தும் குன்மம் எட்டும்
கரை அடங்கா வாயு என்ற இருபத்தாறும்.

102 மிக்கான வாய்வென்பது இருபத்து நாலும்
வேகவகை இரண்டு பத்தும்.

157 வாறான பெண்களுக்கு கர்ப்பநோய் ஏழும்

164 மேகமொடு நால் வகையாம் பிரமியங்கள்.

201 கொள்ளவே கிராணிவகை ஆறும் எங்கே.

307 கதிப்புள்ள பீனிசங்கள் ஏழும் போகும்.

340 நடுங்குமப்பா சுரம் எட்டும் குன்மம் எட்டும்.

422 சன்னி பதிமூன்று ஓடும் தயவாய் பாரே.

**போகர் வைத்தியம் 700ல் குறிப்பிட்ட நோய் எண்கள்**

| | |
|---|---|
| மேகநோய்கள் | 20 |
| சிலேத்தும நோய் | 96 |
| குட்டம் | 26 (24) |
| பித்தம் | 40 |
| வாதம் | 80 |
| சூலை | 18 |
| சிலந்தி | 64 |
| பவுத்திரம் | 4 |

| | |
|---|---|
| பெண் மலட்டு நோய் | 7 |
| சில் விஷம் | 63 |
| குன்மம் | 8 |
| கிராணி | 6 |
| குட்டம் | 18 |
| வலி | 6 |
| வாயு | 26 |
| வாயு | 24 |
| பிரமியம் | 4 |
| பீனிசம் | 7 |
| சுரம் | 6 |
| சன்னி | 13 |

தேளப்பா நாதத்தில் விந்து புக்கில்
கெட்டியுடன் நாலாயிரம் க[illegible]ச்சு
தேளப்பா கொட்டியதோர் விடங்கள் போலும்
நெசநாடி எழுபத்து ஈராயிரத்தில்
வேளப்பா அடங்கி நிறைரோகம் எல்லாம்
விளைந்ததடா அவரவர்கள் வினையால் காண்நீ
சூளப்பா நோய்விளைந்த விவரம் பாரு
சுழு முனைபற்றி நின்ற நிலை நாடிப்பாரே. (480)

### வைத்திய வகை

| | |
|---|---|
| வியாதி அறிதல் | காரணம் அறிதல் |
| நீங்கும் வழி | காலங்களின் அளவு |
| நோயினர் அளவு | உடல் இயல்பு |
| பருவம் | துன்பங்கள் |
| தீரும் தீராதது அறிதல் | மருந்து அறிதல், தவறாமை |
| அறுத்தல் | சுடுதல் |

### மருத்துவன் வகை

| | |
|---|---|
| நோய் பார்த்தற்கு அஞ்சாமை | கல்வி அறிவுடமை |
| பலகாலும் தீர்த்து வருதல் | தூய்மை |

## வைத்தியம் செய்துகொள்வோன் முறை

*பொருளுடைமை* — *மருத்துவன் சொல் கேட்டல்*
*நோய்நிலை உரைத்தல்* — *மருந்துத்துன்பம்*
*வன்மை* — *பொறுத்தல்*

## மருந்தின் வகை

*பல பிணிகளுக்குத் தருதல்* — *சுவை குணத்தால்*
*எளிதில் கிடைத்தல்* — *மேம்படுத்தல்*
*உடலில் பொருந்தல்* — *தூய்மையுடன் இருத்தல்*

## இருந்தும் இறந்தவர்கள்

*தீராப்பிணி உள்ளவன்* — *வறுமை உள்ளவன்*
*கருமி* — *உழைத்து உண்பவன்*

## துன்பம்

*கர்ப்ப துன்பம்* — *பிறவித்துன்பம்*
*இளமைத்துன்பம்* — *முதுமைத்துன்பம்*
*மரணத்துன்பம்* — *நரகத்துன்பம்*

## இன்பம்

(மருத்துவ அகராதிகள்)

*உணவு* — *உறக்கம்*
*காதல்*

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.